

மலர் 7: இதழ் 3
சர்வசித்து வருடம்
ஐப்பசி - மார்கழி
திருவள்ளுவர்
ஆண்டு
2038

**கௌரவ ஆசிரியர்கள்**
பேரறிஞர்
முருகவே பரமநாதன்
டாக்டர் இ. லம்போதரன்

**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**ஆசிரியர் குழு**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி

**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்

**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651

**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
217 Morningside Ave.
Apt. 912
Toronto, ON. M1E 3E4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org

உ

*சிவமயம்*

# ஆத்மஜோதி

*தாபிதம்: 1948*

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185

## உள்ளடக்கம்

1. ஆசிரியர் தலையங்கம்
2. எங்குமுள்ள பிள்ளையார்
3. பேரூர்ஆதின முதல்வருக்கு முனைவர் பட்டம்
4. மலர் நயம்
5. சைவ வாழ்வியல்
6. பட்டணத்தாரும் அருணகிரியாரும்
7. சிவயோக சுவாமிகளுக்கு வார வணக்கம்
8. ஒல்லாந்து யாத்திரை
9. சுந்தரேசம்பிள்ளை ஐயா
10. செப்பறைச் சுவாமிகள்
11. இந்து சமயப் பேரவைச் செய்திகள்
12. சிதம்பர இரகசியம்
13. யார் சாட்சி?
14. நெஞ்சாரப் பொய்தனைச் சொல்ல வேண்டாம்
15. ஈழத்துச் சித்தர் நயினாதீவுச் சுவாமிகள்
16. ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை, கனடா

இப் பேரவை கனடாவிற் சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக்குடன் 1994ஆம் ஆண்டு பெயர்பெற்ற சமய ஆசிரியர் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களால் நிறுவப்பெற்றது. அன்று முதலாகப் பலவகையான சமய, தமிழ்ப் பணிகளில் பேரவை ஈடுபட்டு வருகின்றது. இவற்றுள் சைவத்தையும் தமிழையும் கற்பித்தல், சிறுவர் மத்தியிற் சமயப் பரீட்சைகள், மற்றும் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்குதல், குருபூசைகளைக் கொண்டாடுதல், நூல் வெளியிடுதல், சமய விழாக்கள் எடுத்தல், திருமுறைகள் முற்றோதுதல், முதியோருக்கு உதவுதல், அவர்கள் நல்வாழ்வுக் காகக் கூட்டு வழிபாடுகள் செய்தல், தாய்நாட்டில் அகதிகளுக்கு உதவுதல் என்பவை தொடர் பணிகளாகவுள்ளன.

பன்னிரு திருமுறை முற்றோதல் நிறைவை விழாக்களாகக் கொண்டாடி அவற்றின் அருமை பெருமைகளை மக்கள் மத்தியிற் பரப்பும் பணியிலும் பேரவை ஈடுபடுகின்றது. திருமுறை முற்றோதல் எட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. 2006இலிருந்து முற்றோதல் நிறைவு விழா திருமுறை மாநாடாக நடத்தப்படுகின்றது.

பேரவையின் சாதனையாகப் பேசப்படுவது 2004இல் கொண்டாடப்பெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் 125ஆவது குருபூசை விழாவாகும். விழாவின் சிறப்புச் செயற்பாடுகளாக நாவலர் பெருமானுக்குச் சிலை வைத்தமையும், முத்திரை வெளியிட்டமையும் அமைந்தன. சைவத்தையும் தமிழையும் வளர்த்த நாவலர் பெருமானை மறவாது மேற்குலகத்தில் முதன்முதலாகச் சிலைவைத்துச் சிறப்பித்த பெருமை இந்து சமயப் பேரவைக்குரியது.

பேரவையின் பெருந்தொண்டாக அதன் நூல்வெளியீட்டுப் பணியும் அமைகின்றது. இதுவரை சிறுவர் கல்வி, சமய தத்துவங்கள், தமிழ் மொழி வளர்ச்சி சார்ந்த 40 நூல்களை அது வெளியிட்டுள்ளது. நூல்கள் வெளிநாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன.

பேரவையின் கூட்டமைப்பாக விளங்குவது ஆத்மஜோதி தியான நிலையம். இது தாயகத்தில் அமரர் நா. முத்தையா அவர்களால் 35 ஆண்டுகளுக்கு மேலாக நடத்தப்பெற்ற ‘ஆத்மஜோதி’ சஞ்சிகையைக் காலாண்டுப் பத்திரிகையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டுச் சமய அறிவைப் பரப்பி வருகின்றது. நூல்நிலையம் ஒன்றையும் நடத்துகின்றது.

சமயம் இறைபத்தி மூலம் அன்பையும் ஆதரவையும் பண்பையும் பொதுநலத்தையும் வலியுறுத்துகின்றது. இவ்விழு மியங்களைக் கனடாவில் தமிழர் மத்தியில் வளர்க்கும் பொறுப்பை இந்து சமயப் பேரவை நன்கு உணர்கின்றது. எனினும் அதன் முயற்சிகளை எடுத்துச் செல்வதற்கு நிரந்தரமான கட்டிடம் ஒன்று இல்லாதது பெருங்குறையாக உள்ளது.

வகுப்புகள் நடத்தவும், நூல் நிலையச் சேவையைச் செவ்வனே செய்யவும், முதியோர் சேவைகளை முறையாக முன்னெடுக்கவும் பலவகையான வசதிகளைக் கொண்ட கட்டிடம் ஒன்றை வாங்கப் பேரவை திட்டமிட்டுள்ளது. இப்பணிக்குச் சிவநேயச் செல்வர்கள் உதவிபுரிய வேண்டுமெனக் கேட்கின்றோம்.

ஓம் நமச்சிவாய.

\- வி. கந்தவனம்


# P. KAYILASANATHAN

**B.A.(Cey.) LL.B(Cey)**

Barrister & Solicitor

**உங்கள் தேவைகளுக்கு குறிப்பாக......**



குற்றவியல் வழக்குகள்
குடிவரவு, அகதிநிலை விண்ணப்ப விசாரணைகள்
மேன்முறையீடுகள்
மனிதாபிமான அடிப்படை விண்ணப்பம்
ஸ்பொன்சர் சம்பந்தமான சகல விடயங்களும்
வீடு, வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல் விற்றல்
குடும்ப விவகாரம்
வாணிபச் சட்டங்கள் சம்பந்தமான சகல விடயங்கள்

**2401 Eglinton Ave. East, Suite 302**
**Scarborough, ON. M1K 2M5**
**Tel: 416-752-9561**
**Fax: 416-752-7262**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்குமுள்ள பிள்ளையார்

## காங்கேசன்துறை
## ஆனந்தப் பிள்ளையார்

ஆத்திரச் சூரனை அடக்கி வென்றார்
அத்தனின் தேரினை முடக்கி நின்றார்
தீர்த்தமா டித்திரை கடலுக் கப்பால்
திருத்தலஞ் செல்பவர் சிந்தை செய்யும்
யாத்திரைப் பிள்ளையா யருளி மேனாள்
ஆனந்தப் பிள்ளையா யிந்நாள் ஆனார்
காத்தருள் காங்கேசன் துறையிற் செய்வார்
கவின்கழல் ஏத்துவார் காண்பார் பேறே. (48)

## வயாவிளான்
## மானம்பராய்ப் பிள்ளையார்

முன்னுளார் பின்னுளார் முதல்வ ரானார்
முப்புரம் எரித்தவர் பிள்ளை யானார்
உன்னுமுன் உதவிடும் உறவு மானார்
உலகெலாம் வணங்கிடும் இறையு மானார்
அன்னையுந் தந்தையும் அகிலம் என்றே
அன்புடன் வலம்வந்து பணிய லானார்
மன்னுபேர் வயவையூர் மக்கள் போற்ற
மானம்ப ராய்தங்கி யருளு வாரே. (49)

## அச்சுவேலி
## உலவிக்குளத்துப் பிள்ளையார்

நிலநீராய் வளிவானாய் நெருப்பாய் நிற்பார்
நிலைபெறவே நினைவார்க்குப் பொறுப்பாய் நிற்பார்
வலம்வந்து பெற்றோரை வணக்கஞ் செய்தார்
வள்ளிமகள் வேலவனை மணக்கச் செய்தார்
அலகில்லா அடியார்வாழ் அச்சு வேலிக்
கழகூட்டும் உயர்தென்னை நிழலைத் துய்க்கும்
உலவிக்குளம் உவந்தருளும் ஒப்பிற் பிள்ளை
ஒண்கழல்கள் தொழுதுருகின் உய்வுண் டாமே. (50)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்வேலி
## வாய்க்காற்றரவைப் பிள்ளையார்

முன்பசுரன் மூர்க்ககுணம் முடித்த மூத்தோன்
முடித்தழுத வானவரின் முகாரந் தீர்த்தோன்
ஒன்பதையுஞ் சீராக்கி உடலைப் பேணி
உயிருற்ற தீவினைகள் ஒழித்து நன்கு
மன்பதையில் வாழவழி வகுக்க வல்லோன்
வணங்குவரோ டென்றென்றும் வாழும் நல்லோன்
அன்புவளர் நீர்வேலி அடைந்து வாய்க்கால்
தரவையிலே அருள்கின்ற பிள்ளை யாரே. (51)

---

# பேரூர் ஆதீன முதல்வருக்கு முனைவர் பட்டம்



பேரூர் ஆதீன முதல்வர் வணக்கத்துக்குரிய கயிலைக்குருமணி தவத்திரு சாந்தலிங்க அடிகளாருக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் 12-11-2007 அன்று முது முனைவர் பட்டம் வழங்கிச் சிறப்பித்திருக்கும் செய்தியை அறிந்து கனடா இந்து சமயப் பேரவை பெருமகிழ்ச்சி அடைகிறது. அடிகளார் கனடாவுக்கு வந்தும் சமயப்பணிகள் செய்திருக்கிறார்கள். 2006ஆம் ஆண்டு இந்து சமயப் பேரவை நடத்திய முதலாவது திருமுறை மாநாட்டிற் கலந்து பல சிறப்புரைகள் ஆற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது அருட் பணிகள் தொடர ஆடல்வல்லானை வணங்கி ஆத்மஜோதி ஆசிரியர்களும், வாசகர்களும் இந்து சமயப் பேரவைத் திருக்கூட்டத்தினரும் வாழ்த்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர் நயம்

**மலர்: 'ஆத்மஜோதி',**
இந்து சமயப் பேரவையின் இலவச வெளியீடு
திருமுறை மாநாடு, 2007 சிறப்பு மலர், ஏப்ரல் - ஜூன், 2007
(64 பக்கங்கள்)

நூல் நயம் எழுதியவர்: சித்தாந்த பண்டிதர், வாகீசகலாநிதி,
**கனகசபாபதி - நாகேஸ்வரன், M.A.**
முதுநிலைத் தமிழ் விரிவுரையாளர்
சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிகுல்லோயா, இலங்கை

கனடா இந்து சமயப் பேரவையினர் சிறப்புடன் நடத்திய திருமுறை மாநாடு 2007இன் சிறப்பு மலரான 'ஆத்மஜோதி' இதழை அம்மன்றத்தின் செயலாளரும், ஆசிரியர் குழுவிலொருவருமான சிவதொண்டர் திரு. சிவ.முத்துலிங்கம் ஐயா அடியேனுக்கு அனுப்பி வைத்துள்ளார். அம்மலர் இலங்கையில் 13-09-2007 அன்று எனது கையிற் கிடைத்தது. தமிழிலே பிரசுரிக்கப்பட்ட கனடாவின் சஞ்சிகையொன்று எனக்குக் கிடைத்ததும் திருவருளே! கனடாவின் மணியோடர்கள், பதிவுத் தபால்கள் பார்சல்கள் என்பன அனுப்பிய இடத்திலேயும் அனுப்பப்பட்ட முகவரியிலுள்ளவர்கள் வாழும் நாட்டிலும் உரிய காலத்திலே கிடைப்பதென்பதும் அபூர்வ நிகழ்வுகளே! சிற்சில அற்புதங்களுக்குள் இதுவுமொன்று. எல்லாம் வல்ல திருவருளின் பரங்கருணையை இறைஞ்சி நிற்கிறேன்.

நாவலப்பிட்டியில் எனக்குக் கற்பித்த பேராசான் ஆத்மஜோதியின் ஈழத்திதழ்களின் ஆசிரியராயிருந்த 'ஆத்மஜோதி' நா. முத்தையா ஆவார். 'ஆத்மஜோதி' என்ற பெயர் நூலுக்கும், ஆளுக்கும் இன்று விளங்குகிறது. 'ஆத்மஜோதி' என்ற பெயரினை இட்டவர் எம்வம்ச முன்னோடியும் இல்லறஞானியுமான நயினை க. இராமச்சந்திரா ஆவார். இன்று கனடாவிலிருந்து 'ஆத்மஜோதி' இதழ் வெளிவருகிறது. இது இலவச வெளியீடு. இலங்கையில் வெளியான அளவிலேயே கனடாவிலும் வெளிவருகிறது என்பதறிந்து மனமிக மகிழ்ந்தேன். மாணவர் அறிவு வளர்ச்சிக்குச் சிறுசஞ்சிகைகள் பெரும் பயனளிப்பனவாம்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலே உயர் கல்வியை மேற்கொண்டிருந்த காலத்தில் (1966-1974) அடியேன் இலங்கையில் வெளிவந்து கொண்டிருந்த 'ஆத்மஜோதி' இதழைத் தேடிப்பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்து வந்தவன் என்பதால் அதன் சமய உள்ளடக்கம் (பொருளடக்கம்) எனக்குத் தண்ணி பட்டபாடம். அரிய சமயக் கட்டுரைகள், சித்தாந்தம், தத்துவம், திருமுறை, ஞானிகளின் வரலாறு, அற்புதங்கள் (தொகுப்பு), அநுபூதி, பக்தி, இலக்கியம், உலகளாவிய சிந்தனை, சைவநீதிக்கருத்துகள் என்பனவற்றுடன் இன்னும் பல அம்சங்கள் ஆத்மஜோதி சஞ்சிகையில் இடம்பெறும். அதே அருட்டுணர்வுடனும் பொருளடக்கத்துடனும் 'கவிநாயகர்', 'சைவதுரந்தரர்' வி. கந்தவனம் ஐயா தலைமையிலும், செயலாளர் சிவ முத்துலிங்கம், பொருளாளர் செ. சோமசுந்தரம் ஆகியோரின் அருமுயற்சியினாலும் கனடா வாழ் சைவத் தமிழர்களின் பேராதரவுடன் வெளிவந்துள்ளது. 'ஆத்மஜோதி' சஞ்சிகை. இச்சஞ்சிகையின் கௌரவ ஆசிரியர்களாகப் பேரறிஞர் முருகவே. பரமநாதன் அவர்களும், டாக்டர் இ. லம்போதரன் அவர்களும் உள்ளனர். இச்சஞ்சிகையை 'ஆத்மஜோதி' தியானநிலையம் வெளியிட்டு வருகிறது.

2007 திருமுறை மாநாட்டுச் சிறப்பு மலரின் பொருடக்கம் இருபத்தைந்து வெவ்வேறு தலைப்புகளிலே வெவ்வேறு கட்டுரையாளர்களின் விடயதானங்களுடன் இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் வெளியான 'ஆத்மஜோதி' இதழ்களின் சமயக் கனதியைக் கனடா இந்து சமயப் பேரவையின் 'ஆத்மஜோதி' இதழிலும் கண்ணுற்றேன். அதில் முதன்மையும் முன்னுரிமையும் பெறுவது சமய நம்பிக்கையெனும் அடித்தளம். ஆதாரம். இப்பண்பு திருமுறை மாநாட்டு 2007 ஆத்மஜோதிச் சிறப்புமலரிலே மிளிர்கிறது. முதலிலே இதற்காக மலரினைப் பாராட்டி வாழ்த்திப் போற்ற விரும்புகிறேன்.

' 'ஆத்மஜோதி' - 2007, திருமுறை மாநாட்டுச் சிறப்பு மலரிலே 'கவிநாயகர்' வி. கந்தவனம், திரு. த. செ. நடராசா, திருமதி தங்கமுத்து தம்பித்துரை, திருமதி இராசமலர் சின்னராசா, 'ஆழ்கடலான்' முருகவே. பரமநாதன், திருமதி கமலாதேவி மகாலிங்கம், திருமதி பரமேஸ்வரி பரமநாதன், திருமதி சின்னத்துரை செல்லமுத்து, சித்தாந்த கலாநிதி க. கணேசலிங்கம், திருமதி குலமணி கந்தசாமி, திருமதி தவனேஸ்வரி சாம்பசிவம், 'ஞானசுரபி' நா. முத்தையா, திரு. முருகு. தம்பையா, திரு. செ. சோமசுந்தரம், தயாநிதி மகேந்திரன் B.A., அமரர் திரு. கா. கதிர்காமத்தம்பி, 'திருமுறைச் செல்வர்' சிவ. முத்துலிங்கம் ஆகியோரது கட்டுரைகளும் கருத்துரைகளும் இடம்பெற்றுள்ளன. 'ஆத்மஜோதி' ஜெயந்தி விழாவில் வெளியிடப்பட்ட 'ஞானவிளக்கம்' என்ற நூலின் பிரதிகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொள்ளும் பெரியவர்களது படமும் பககம் 62 இல் உள்ளது. அட்டைப் படத்தில் பெரிய புராணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த வண. ஆஸ்ரயர் மைக்கிலாஷன் அவர்கள் துணைவியாருடன் இடம்பிடித்துள்ளார். விளம்பர அனுசரணையாளர் களின் உதவியும் ஆத்மஜோதிக்குக் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கனடாவிலும் இலங்கையிலும் தமிழ் மக்கள் அவலங்களைத் துடைக்கத் தக்கவகையில் பணிபுரியும் பரிஸ்டர், சொலிசிற்றர் கைலாசநாதன் அவர்களது திருவுருவத்தைக் (பக்.42) கண்ணுற்றபோது என்னுள் இனம்புரியாதவோர் மகிழ்வுணர்ச்சி யுண்டாயிற்று. மிகநீண்டகால இடைவெளிக்குப்பின் 'ஆத்மஜோதி' இதழைக் கண்ணுற்றமை திருப்தி.

ஆத்மஜோதி இதழின் இரண்டாமிடம் பெறும் 'சமயக் கனதி' சமய ஞானிகளின் சிந்தனையும் தொடர்பும் என்பதாகும். அதாவது இவ்விதழ் எனது மனக்கண்முன் நான்கு சித்தர் பெருமக்களை நினைவுபடுத்தியது. நயினை முத்துக்குமாரசுவாமி, திருக்கேதீச்சரம் சபாரத்தினசுவாமி, திருமூலர், மாணிக்கவாசகர் என்போரே அந்த நால்வருமாவர். இந்த நால்வரினதும் ஞானவொளி வீச்சைக் கொண்டு வெளியாகியுள்ளது திருமுறைச் சிறப்பிதழ் 2007 'ஆத்மஜோதி' என்பேன். இது மறைஞானத் தொடர்பு: மெய்ஞ்ஞானவுண்மை.

இனி, சுருக்கமாக இவ்விதழினூடே சில முத்தான கருத்துகளைச் சுவைக்கலாம் என்பதற்காக எடுத்துக்காட்ட விளைகிறேன்.

''தெய்வபக்தி மிகப்பெரிய சொத்தாகும். தமிழ் மந்திரங்களாகிய திருமுறைகளைப் பக்தியுடன் படிக்க வேண்டும். படிக்கும்போது பக்தியுடன் படித்தால் பக்குவநிலையை அடைய முடியும்.'' (ப.11)

"இதயக் கமலத்தை இறைவன் இருப்பிடமாக்கினோம் என்றால் வாழ்க்கையில் வரக்கூடிய இன்ப, துன்ப, துயரங்களை வெல்ல முடியும்.'' (ப.11)

"அரன் அடியில் அன்பு நிலையே இன்ப நிலையைத் தரும்.'' (ப.11). எனத் திருமதி இராசமலர் சின்னராசா எழுதியவை மனதில் கொளற்பாலது.

''கந்தமூலங்கள் - உணவாகிப் பயன்படும் கிழங்குகள்' கனல்வாதை - பசி. (ப.13) என்னும் 'ஆழ்கடலான்' முருகவே. பரமநாதன் தரும் விளக்கம் போற்றியறியத் தக்கது.

''சிவசிந்தனைகளில் ஒன்று மனம் அடங்கி இருக்கும். பக்குவநிலை பெற்றுவிட்டால் பாவம் தொலையும், பிறவித்துயர் அறுபடும், அறியாமை இருள்நீங்கும், துன்பம் இருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பரம்பொருளுக்குத் தன்னை ஒப்படைத்து விட்டு அடிமையாக்கிக் கொண்டு சிந்தை செய்வார்க்கு என்றும் துன்பமே இல்லை இன்பமே என்று கூறுகின்றார்.'' (ப.19) எனத் திருமந்திரச் செய்யுளொன்றுக்கு உரை கண்டுள்ளார் திருமதி கமலாதேவி மகாலிங்கம்,

''இந்து சமயப் பேரவையினர் பன்னிரு திருமுறைகளைப் படிக்க வைத்தார்கள். எல்லாரையும் அன்பாய் மதிக்கிறார்கள்'' (ப.24) என்றும்,

''பெரும் பொய்களைச் சொல்லி வீண்பொழுதைக் கழிக்கின்ற எங்களுக்கு ஒருநாள் என்றாலும் படிக்க வைக்கின்ற பேரவையினருக்கு மிகவும் நன்றி (ப.24) என்றும் இந்து சமயப் பேரவையினரின் சமயப் பணிகளைப் பாராட்டுகிறார் திருமதி சின்னத்துரை செல்லமுத்து.

திரு. க. கணேசலிங்கம் (பக். 27-28) 'சைவத் தமிழ்ச் சான்றோன் ஆறுமுகநாவலா்' குறித்து ஐந்து மணியான கவிதைகளை எழுதியுள்ளார். சந்தக்கொழிப்புடன் அமைந்த முத்தான பாடல் இது:

''பழந்தமிழ்ப் பெரும் ஏடுகள் தமைப்
பலர நிந்திட அச்சிலே
வழங்கி னைதமிழ் சைவம் வாழ்ந்திட
வாழ்வையே பணிக் காக்கினை
விளங்கு நீறணி வேடமும் சிவம்
வளரு சிந்தையும் வீரமும்
உளங்கொள் தொண்டன்யாழ்ப் பாண நல்லூர்
உதித்த ஆறுமுக நாவலா்.''

''பகவானுடைய ஒவ்வொரு நாமத்துக்கும் அபாரமான தத்துவ சக்தி உண்டு. அது மனிதனைத் தெய்வத் தன்மை வாய்ந்தவனாக மாற்றி அமைக்கிறது'' (ப.32) என்கிறார் 'ஞானசுரபி' நா. முத்தையா.

''சிவபெருமான் கையெழுத்துப் போட்ட இடம் ஒன்றே. அதுவே திருவாசகம். இந்த அற்புதம் சைவத்துக்கு மட்டுமே உண்டு. திருமுறைகளுள் சிறப்பு வாய்ந்தது திருவாசகம். ஏன் எனில் எம்பிரானால் எழுதப்பட்டது. திருவாசகத்தேன் மனிதகுலத்தை வாழவைக்கும் மாமருந்து. கல் போன்ற மனத்தையும் நீராக ஓடவைக்கும் கூர்மையுடையது. இன்னும் மக்களை நல்வழிப்படுத்த வல்லது திருவாசகமே.'' (ப.37)

''சிவபுராணத்தில் முதலில் சிவனை ஆறுமுறை வாழ்க வாழ்க என்று வாழ்த்துகிறார். அடுத்து அற்புதங்கள் செய்த இறைவனின் திறம் வெல்க என்று வெற்றிச் சங்கு ஊதுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்தியும், வெல்க என்றும் பாடி வீரத்தைப் போற்றியும் வணங்குகிறார். எண்குணத்துக்கும் எட்டுப்போற்றி கூறுகிறார்.''
(ஏ.37)

பட்டி மண்டபம் என்பது 'சிவஞானம் கைவந்த அன்பர் குழாம்' என்று கொள்வதே பொருத்தமுடையது. (ப. 44) என்கிறார் சித்தாந்தரத்தினம் க. கணேசலிங்கம்.

'கவிநாயகர்', 'சைவதுரந்தரர்' வி. கந்தவனம், பெரிய புராணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த வண. ஆஸ்ரயர் மைக்கிலாஷன் அவர்களுக்க 2007 இல் சுவிஸில் நடைபெற்ற சூரிச் சைவமாநாட்டில் ''சிவதொண்டன்'' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தபோது பாடி வழங்கிய வாழ்த்துப்பாவில் ஒரு பாடல் வருமாறு:(ப.52)

''வெம்பொருளை வீரிக்கின்ற வீணறிஞர்க்கொருபாடம்
தம்பெருமையறியாத சைவருக்குத் தனிப்பாடம்
செம்பொருளை விளக்குதற்குச் சிறந்தவொரு திருப்பாடம்
நின்பணிநற் பயன் விளைத்தே நிலைபெறுமே வாழியவே.''

''வழிபாட்டிற்கு அன்பும் ஆசாரமும் இரண்டு கண்கள் போன்றவை'' (ப.54)

''பக்தி உள்ள மனிதன் மாத்திரமே தன்னிலும் உயர்ந்த ஒரு பொருள் இருப்பதை உணரமுடியும்'' (ப.64) இதனை ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டதாகத் திருமுறைச் செல்வர் சிவ.முத்துலிங்கம் எழுதியுள்ளார்.

இனி, இந்நூல் நயம் பகுதியில் எடுத்துக்காட்ட விழைவது பக்.9 இல் இடம்பெறும் 'சொல்வேந்தர்' சுகிசிவம் அவர்களது கருத்துகளாகும்.

''ஆசை உள்ளவை விலங்குகள். அன்புள்ளவர்கள் மனிதர்கள். அருள் உள்ளவை தெய்வங்கள். மனிதர்கள் எல்லோரும் மனிதர்களாகவே தோன்றினாலும் மனத்தில் உள் ஆசை விலங்கு ஆக்கும். அன்பு மனிதனாக வைத்திருக்கும். அருள் தெய்வமாகவே உயர்த்திவிடும். பிறரைக் கெடுத்தாவது துன்புறுத்தியாவது தான் மகிழ்ச்சியோடு இருக்க நினைப்பது ஆசையின் இலக்கணம். தானும் நன்றாக இருக்க வேண்டும் மற்றவர்களும் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைப்பது அன்பின் இலக்கணம். பிறர் துன்பப்படக் கூடாது என்கிற கருணை அருளின் இலக்கணம்.''

' ஆத்மஜோதி' வெளியீடுகள் கனேடிய தமிழ்ச் சமூகத்தின் 'உயிராதர்ஷம்' என்று கூறினால் அது மிகைக் கூற்றல்ல. வேற்றுக் கலாசாரம், பண்பாடு, நடையுடை பாவனை, உணவுப் பழக்கம், வேற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதம் என்பன கோலோச்சும் சூழலில் நேரமே கிடையாது உழன்று அலைந்து-களைத்து நிற்கும் தமிழ் பேசும் மக்களுக்கு ‘ஆத்மஜோதி’ நல்லறிவுச் சுடர் கொளுத்தும் சஞ்சிகை என்பது பேருண்மை. கனடாவிலே கண்கவர்ச்சியுடைகளிலே வெளிவரும் சஞ்சிகைகளினுள்ளும் ‘ஆத்மஜோதி’ ஆன்மீக, அருட் கவர்ச்சி களையும், அறிவுக் கவர்ச்சியையும் கொண்டு மிளிரும் ‘கருத்துக் கருவூலம்’ என்பதனை மட்டும் உணர்த்தலாம்.

ஆத்மஜோதியை வாசிக்கும்போது அதிற் காணும் ‘இறையற் புதங்களே’ அருளியலின் நிலைபேற்றுக்குச் சான்றாதாரங்கள் எனலாம். இறைபக்தியை மேம்படுத்தும் ஆத்மஜோதி சஞ்சிகை நீடு நிலைக்க! இச்சஞ்சிகையினை வெளியிடும் இந்து சமயப் பேரவையின் பணிகள் வெல்க.


மொழித்துறை
சப்ரகமுவ பல்கலைக்கழகம்
பெலிகுல்லேயா
இலங்கை


FASHION FLORIST INC.

பாஷன் பூக்களஞ்சியம்

பாபுவின் கைவண்ணத்தில்

பூக்கள் மாலையாகின்றன







416-754-8282

4400 Sheppard Ave. East, Unit 5

Scarborough, ON.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ வாழ்வியல்

டாக்டர் இ. லம்போதரன்

கேள்வி: கனடா போன்ற மேல்நாடுகளில் இல்லங்களில் இறை வழிபாட்டை நடைமுறைப்படுத்துவதில் இடப் பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டியிருக்கின்றது. இல்லங்களில் சைவ நெறிப்படியான இறை வழிபாட்டை இலகுவாக நடைமுறைப்படுத்த என்ன செய்யலாம்?

பதில்: இங்கு மேல் நாடுகளில் இல்லங்களில் இறை வழிபாட்டை நடைமுறைப்படுத்துவதில் உள்ள முதலாவது பிரச்சினை இடம். இரண்டாவது எல்லாவற்றுக்குமே பொதுவாக உள்ள பிரச்சினையான நேரமின்மை. இறைவழிபாட்டுக்கு என்று ஒரு இடம் நாம் வீட்டில் ஒதுக்குவது அருகி வருகின்றது. தாயகத்தில் வீட்டில் பெரிய அறையை சுவாமி அறையாக்கிய நாம் இங்கு சுவாமிப்படங்களை வீட்டுக்குக் குடிபுகும்போது ஒரு மூடு அறை (Closet) இல் வைத்து விடுவதோடு சரி.

இதற்குச் சுவாமி குற்றம் பொறுக்காது என்றும், சுவாமிப்படத்துக்கு முன்னால் பெண்கள் வீட்டுக்கு விலக்கான நாட்களில் ஓடியாடித்திரியும் தேவையுள்ள இன்றைய வீடுகளில் அவர்கள் முன்னிலையில் சுவாமிப்படம் இருக்கக்கூடாது என்றும், மச்ச, மாமிசம் புழங்கும் வீடுகளில் தலைவாசலிலோ அல்லது நடு வீட்டிலோ சுவாமிப்படம் வைக்கக்கூடாது என்றும், தாம்பத்தியம் கொள்ளும் அறையில் சுவாமிப்படம் வைக்கக்கூடாது என்றும் பல காரணங்களைக் கூறிச் சுவாமியை ஓரங்கட்டுகின்றோம்.

பல வீடுகளில் சுவாமித்தட்டு உள்ள மூடு அறையானது முன்னால் நிற்பதற்குக்கூட இடம் இல்லாமல் வீட்டு நடைபாதையில் (Corridor) இருப்பதாக இருக்கின்றது. இந்நிலையில் நாளாந்தம் இல்லாவிட்டாலும் இடைக்கிடையேனும் அமர்ந்து இருந்து பிரார்த்தனை செய்வதற்கு எங்கு இடம் இருக்கின்றது?

இறைக்கு இடமில்லாத வீட்டில் நிம்மதிக்கும் இடம் கிடையாது என்பது அனுபவத்தில் கண்ட உண்மை. ஆகவே சுவாமிப்படங்களை படுக்கை அறையிலோ, கூடத்திலோ (Living Room or Sitting Room) வைக்க கூச்சம் உள்ளவர்கள் முன்னால் அமர்ந்து வழிபடக்கூடியதாக இடவசதி உள்ளதான ஒரு மூடு அறையிலாவது (Closet) சுவாமிப்படங்களை வைத்துக் கொள்ளலாம். இதனால் எல்லோரும் ஆறுதலாக அமர்ந்து இருந்து வழிபட மனம் உண்டாகும்; ஆசை வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம்பத்தியம், பெண்களின் மாதவிலக்கு, மச்ச மாமிச புழக்கம் பற்றிய கூச்சம் உள்ளவர்கள் சுவாமிப்படம் உள்ள மூடு அறைக்கு அல்லது படத்துக்கு திரை போட்டு வைத்திருந்து வழிபாட்டு நேரங்களில் ஒதுக்கி வழிபடலாம். ஆனால் இதன்போது வீட்டில் போகும்போதும், வரும்போதும், வெளியில் அவசரமாகச் செல்லும்போதும் சுவாமியின் மங்களமான திருமுகத்தைப் பார்த்து, நினைத்து, உணர்ந்து, அனுபவிக்கும் வாய்ப்புகள் குறைகின்றன.

மச்சமாமிசம் புசிப்பவருக்குப் பிரணவங்கூடாது. சிகாராதி பஞ்சாக்ஷரம் கூடாது. அவர் நகாராதி பஞ்சாக்ஷரம் பிரணவங்கூட்டாது உச்சரிக்கக்கடவர் - என்று நித்தியகருமவிதியின் முன்னுரையாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கூறுகின்றார். அதாவது மாமிசம் உண்பவர்கள் தமது வழிபாடு, பூசைகளைச் செய்யும்போது ஓம் என்ற பிரணவ மந்திரம் இல்லாது சிவாயநம என்று சொல்லாமல் நமசிவாய என்று மந்திரத்தைச் சொல்லி வழிபட வேண்டும் என்பதாகும். சைவர்களுக்கு விதிகளை தெளிவாக விதித்த நாவலரே விதிவிலக்குகளையும் நடைமுறை மச்ச மாமிசம் பாவிப்பவர்களுக்கும் சொல்லியிருக்கையில் நாம் கடவுள் படங்களை வீட்டில் வைப்பதற்குத் தயங்கத் தேவையில்லை. மாமிசம் உண்ணாமை சைவத்தில் விதிக்கப்பட்டு விதந்தோதப்பட்டாலும் அந்நிலைக்கு வரும்வரை சுவாமிப்படங் களையும், வழிபாடுகளையும், மந்திர செபங்களையும் விலக்கவோ, அஞ்சி ஒதுக்கவோ தேவையில்லை. இவை எமக்கு இந்த லௌகிக வாழ்க்கையைச் செவ்வனே வாழ்வதற்கு உதவுவதோடு ஆன்மீகப்படியிலும் எம்மை சிறிது சிறிதாக முன்னேற்ற உதவுகின்றன.

எல்லா இல்லங்களிலும் மனிதருக்குக் கஷ்டங்கள், துன்பங்கள், நோய்கள், பிரச்சினைகள், சண்டைகள், சச்சரவுகள், குறைகள், இயலாமைகள் உண்டுதான் ஆயினும் இறை வழிபாட்டுக்கு என்று இடம் உள்ள வீட்டில் இப்பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மனத்திடமும், எதிர்காலத்தில் நம்பிக்கையும் சிறப்பாக உள்ளன. இதனால் இவர்கள் பிரச்சினைகளை மற்றவர்களைவிட வெற்றிகரமாக எதிர்கொள்ளகின்றார்கள்; சமாளிக்கின்றார்கள்; வெற்றி கொள்கின்றார்கள்; நீண்ட காலம் நோயற்ற நலமான வாழ்வு வாழ்கிறார்கள். இறைக்கு இல்லத்திலே மேலான இடத்தைக் கொடுங்கள்; இல்லத்தில் இறைவனை நாளும் வணங்குங்கள். இதுதான் உங்கள் வாழ் முதல் (Total Life Investment) என உணருங்கள். உங்கள் இல்லம் சிறப்புறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தாரும் அருணகிரியாரும்

பேரறிஞர் முருகவே பரமநாதன்

**சென்ற இதழ் தொடர்ச்சி.....**

பிரபஞ்சச் சேர்க்கையால் இயைந்தது இவ்வுடம்பு. இது உயிருக்கு இருப்பிடமானது தான். எலும்பும் நரம்பும் தசையும் பிணைந்த இவ்வுடம்பில் எத்தனை நோய்கள், எத்தனை துன்பங்கள். இவற்றின் மத்தியில் ஒரு நாள் பிணமாய் வீழும். வீழ்வதற்கு முன் இறைவனிடம் அடைக்கலம் கொடுப்போம் என்பர் பட்டினத்தார்.

இடும்பையும் பிணியு மிடுக்கிய வாக்கையை
உயிரெனுங் குருகுவிட் டோடுங் குடம்பையை
எலும்பொடு நரம்புகொண் டிடையிற் பிணித்துக்
கொழுந்தசை மேய்ந்து மொழுக்குவிழுங் குடிலைச்
செழும்பெழு வுதிரச் சிறுபுழுக் குரம்பையை
மலவுடற் குடத்தைப் புலவுடற் புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக்
கொலைபடைக்கலம் பலகிடக்கும் கூட்டைச்
...............................................................................
நடுவன்வந் தழைத்திட நடுங்கிடும் யாக்கையைப்
பிணமெனப் படுத்தியான் புறப்படும் பொழுதுநின்
அடிமலர்க் கமலத்துக் கபயநின் னடைக்கலம்---

வாழ்வின் நிலையாமையை எண்ணி எண்ணி இயமன்கைப்படும் இருப்புநிலை மாற்றத்தைப் பல பாடல்கள் தோறும் பாடியருளிய பட்டினத்தடிகள். பெற்றதாய் தமர்தாரம், இனசனம் பிள்ளைகள் சந்தையிற் கூட்டம் இதிலோர் சந்தேகம் இல்லையென்பதையும் எடுத்துச் சொன்னார்கள்.

கட்டியணைத்திடும் பெண்டீரும் மக்களும் காலத்தச்சன்
வெட்டி முறிக்கும் மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டி முழக்கி யழுவார் மயானம் குறுகியப்பால்
எட்டி யடிவைப் பரோஇறை வாகச்சி யேகம்பனே.

காலத்தச்சன் - இயமன், மயானம் - சுடலை, கொட்டி முழக்குதல் - பறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையாளு மக்களும் வாழ்வும் தனமுந்தன் வாயின்மட்டே
இனமான சுற்ற மயானமட் டேவழிக் கேதுதுணை
தினையா மளவெள் ளளவா கினுமுன்பு செய்ததவந்
தனையாள் வென்றும் பரலோகஞ் சித்திக்கும் சத்தியமே

தனம் - செல்வம், மயானம் - சுடலை

இப்பூமியிலே மனிதவடிவந்தாங்கி வந்த மனிதன் ஒரு சமூகப் பிராணியாக வாழ்கிறான். இந்தப் புத்தி ஜீவிகளின் வாழ்வியல் இணைப்போடு தொடர்பான அத்தனை ஜீவன்களையும், உடலையும் விட்டு ஒருவனோ, ஒருத்தியோ புறப்படும்போது கொண்டுபோவது அவரவர் செய்த நன்மையும் தீமையுந்தான். எனவே தான் பட்டினத்தார்

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லைப் பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவதில்லை இடைநடுவே
குறிக்குமிச் செல்வஞ் சிவன்தந்த தென்று கொடுக்கறியா
திறக்கும் குலாமருக் கென் சொல்லுவேன கச்சியேகம்பனே.

(குலாமர்-கீழ்மக்கள்) எனப் பகுத்து விளக்குகிறார். இறப்புக்கும் பிறப்புக்குமிடையே கிடைத்த செல்வம் சிவனருளாற் கிடைத்தது. எனவே எல்லாம் இறைவனுடைமையே யென்றெண்ணி இறைவனையே நினைந்து இவ்வுயிரின் பெறுமதியை நிலைநாட்டிப் பிறவிப் பிணியில் இருந்து நம்மை விடுவிப்பதே இந்த மானிடச் சட்டைதாங்கி வந்தவர்களின் இறுதி இலட்சியமாகும்.

இவ்விதமான உண்மைகளை அப்பட்டமாக, ஒவ்வொருவர் நெஞ்சிலும் படியும் வண்ணம்பாடியவர்களுள் ஒருவர் அருணகிரியார் ஆவர்.

அறிவழிய மயல்பெருக வுரையுமற விழிசுழல
அனலவிய மல மொழுக அகவாதே
அனையுமனை யருகிலுற வெருவியழ வுறவுமழ
அழலினிகர் மறலியெனை யழையாதே
செறியுமிரு வினைகரண மருவுபுல னொழியவுயர்
திருவடியி லணுகவர மருள்வாயே
நாலு மைந்து வாசல் நீறுதுாறுடம்பு கால்கை யாகி
நாரியென்பி லாகுமாக மதனூடே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாத மொன்ற ஆதிவாயில் நாடகங்களான ஆடி
நாடறிந்தி டாமலேக வளராமுன்
நூல நந்த கோடிதேடி மால்மி குந்து பாருளோரை
நூறு செஞ்சொல் கூறிமாறி வினைதீமை
நோய்கலந்த வாழ்வு றாமல்கீகவந்து வாருஞான
நூலடங்க வோத வாழ்வு தருவாயே

இவ்வுடம்பு நோயின் கொள்கலம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நோயுற்றுத் தளராமல் நொந்து மனம் வாடாமல் என சிதம்பரசுவாமிகளும், நோய்களற்ற சுகவாழ்க்கையாய் எனத் தாயுமானாரும், நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டுமென வள்ளலாரும் பாடியுள்ளனர்.

எமது சுகாதார ஒழுகலாறும், நல்லொழுக்கமும், துர்நடத்தை இன்மையும், தர்மமும், பணியும், இறையுணர்வும், நல்லெண்ணமும், உணவும், உடற்பயிற்சியும் சிறந்த பழக்க வழக்கங்களும் நம்மைப் பிணியினின்று பாதுகாக்கும். இவ்வாறு பேண வேண்டிய வாழ்வில் வரும் நோய்பிணிகளை வென்று எல்லாம் வல்ல இறைவனை மனமாரப் போற்றிப் பூசித்து வாழும் பெரு நெறிக்கு எம்மை ஆற்றப்படுத்தினர் பட்டினத்தாரும் அருணகிரியாரும்.

ஊறை பிறைக்கின்ற உப்பிருந்த பாண்டத்தை
நாறாமல் நாறி நழுவும் புழுக்கூட்டை
வீறாம் புரத்தை விரும்புகின்ற தெப்படியென்று
ஆறாத நாட்டி லகன்றிருந்தேனில்லையே - பட்டினத்தார்
ஆறாத நாடு - சிவபூமி

மலசலங்களை இறைக்கின்ற உப்பிருந்த பாத்திரத்தை, நாற்றம் அடையாமல் நாறி ஒழியும் புழுக்கூட்டை, செருக்கு நிறைந்த உடலைக் காதலிப்பது எவ்வாறு, அதில் இருந்தும் விலகி என்றுமழியாத வீடு போய் இருந்தேனில்லையே எனப் பட்டினத்தடிகள் பாடியுள்ளார். இதே பொருளமைவில் அருணகிரியாரும் பல நூறு பாடல்கள் தந்துள்ளார் சிலவரிகள் வருமாறு:

நாறு மைந்துவாசல் நீவதானுடம்பு கால்கை யாகி
நாரியென்பி வாடு மாக மதனூடே
நாதமொன்ற ஆதிவாயில்நாட கங்க ளான ஆடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடறிந்திடா மவேக வளராமுன்

நூலுகந்த கோடிதேடி மால்மி குந்து பாருளோரை
நூறு செஞ்சொல் கூறிமாறி வினை தீமை
நோய்கலந்த வாழ்வு றாமல் நீகலந்து வாகுஞான
நூலடங்க வோதவாழ்வு தருவாயே.

ஈயெறும்புநரி நாய்க ணங் கழுகு
காகமுண்ப வுடவேசு மந்து இது
ஏல்வ தென்று மத மேமொழிந்து மத வும்பல்போவே
அறிவழிய மயல்பெருக வுரையுமற விழிசுழல
அனலவிய மல மொழுக
அனையு மனை யருகிலுற வெருவியழ வுறவுமழ
அழனிகர் மறலி யெனை யழையாதே
செறியுமிரு வினைகரண மருவுபுவ னொழியவுயர்
திருவடியி லணுகவர மருள்வாயே.

மனிதகுல வரலாறு இணைவிழைச்சு - (இல்லறம்) என்னும் ஆண் பெண் உறவிலே தான் ஆரம்பமாகிறது. நல்ல பரம்பரை, தலைமுறைகள் ஜெகந்தோறும் அமைய வேண்டும். இந்தச் சிற்றின்பம் பேரின்பத்திற்கும் வழிகாட்ட வேண்டும். எனவே பரத்தையர், பொதுமகளிர் சேர்க்கையையும், மெய்யுறு சேர்க்கையின் ஒழுங்கற்ற கீழ் நிலையையும் இருவரதும் பாடல்கள் வெகு நுணுக்கமாக வெளிப்படுத்தவும் தவறவில்லை.

நானும் குருதிச் சலதாரை தோற்புரை நாடொறும் சீய்
ஊனும் மலக்குழி காமத்துவார மொளித்திடும் புண்
தேனுந் தசைபிளப் பந்தரங்கத்துள் சிற்றின்பம் விட்
டேறும் பதந்தரு வாய்திருக் காளத்தி யீசுரனே.
- பட்டினத்தார்

அரிய பெண்கள் நட்பைப் புணர்ந்து
பிணியுழன்று சுற்றித்தி ரிந்த
தமையுமுன் கரு பைச்சித்த மென்று பெறுவேனோ
திகைத்த தனமொடு பொருள்பறி யொண்கட்
குவட்டி யவர்வலை யழலுறு பங்கத்
திடக்கு தலைபுலை யவர்வழி யின்பைத்தவிர்வேனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகழ்

நிலையில்லாதவற்றை நிலை யென்று நினைப்பதாலேயே மீண்டும் பிறக்கிறோம். ஆசைபடப்பட ஆய்வருந்துன்பம். ஆசையை நீக்கி அன்பைப் பெருக்கி அருள்பெற்று அமர வாழ்வுகாண்பதே மானிடத்தின் நோக்கம்.

முற்றும்.


## திருமுறை மாநாடு - 2008

ஒன்ராறியோ இந்துசமயப் பேரவை நடத்தும் 3வது திருமுறை மாநாடு 2008ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நடைபெறும்

**Dr. Shan A. Shanmugavadivel & Associates**

**டாக்டர் அ. சண்முகவடிவேல்**

**Orthodontics Implants**

**பற்களுக்கு கிளிப் போடுவதிலும்** Implant **பல் கட்டுவதிலும் பயிற்சி பெற்றவர்**

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario, M1K 5J8**
**Monday to Saturday**
Near Kennedy Subway (Rainbow Village Building)

**416-266-5161**

**MAIN SQUARE DENTAL OFFICE**

**7-2575 Danforth Avenue, Toronto, ON. M4C 1L5**
Mon, Tues, Wed, Thurs, Fri, Sat & Sun - Near Main Subway
Dr. Shan - Thusday (Morning)
Dr. Yao San (Tue, Fri & Sat)
Dr. Brian (Monday) Dr. May (Wednesday)

**416-690-0121**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவயோக சுவாமிகளுக்கு வார வணக்கம்

சிவயோகசுவாமிகள் பாடசாலை அதிபர்
இ. பஞ்சாட்சரம்

தாயிற் சிறந்த தயாபர னேநின்றன் தாள்பணிந்த
நேயற்கு வாய்த்த நிலைக்கள னாகிய நித்தியனே
நோயற்ற திவ்ய பெருவாழ்வு நல்கும்நன் நோக்குடனே
ஞாயிற்று வாரம் வருவாய் சிவயோக நாயகமே.

பூமியில் வந்து பிறந்துவிட் டோமினிப் போமளவும்
நாமுனை நாடு மொருமனப் பாட்டுடன் நானிலத்தே
தாமரை யிலைமிசைத் தண்ணீ ரெனவாழுந் தன்மைதரச்
சோமவா ரந்தோறும் வருவாய் சிவயோக சுந்தரனே.

பொங்கர வக்குலம் புறப்படக் கட்டளை போட்டநின்றன்
பங்கய பாதம் பணிபவர்க் கிங்கோர் பயமுமுண்டோ
இங்கிள ஞாயி றெனவேயெம் மாயை இருளகல
மங்கல வாரம் வருவாய் சிவயோக மாதவனே.

சதமெனக் கண்டது நின்பத மல்லால் தரணிமுற்றும்
இதந்தருஞ் சாதன மேதறியேன் அற்ப னென்செய்குவேன்
பதமலர் போற்று மடியரைக் காக்கும் பரிவுடனே
புதனெனும் வாரம் வருவாய் சிவயோக புண்ணியனே.

அரிதான பட்டினத் தார்தந் துறவும் அகழ்ந்துகண்ணைத்
தருவீர னன்பும் திருமூலர் சித்தியும் சம்பந்தனின்
திருஞான வீறும் ஒருதேவ னான சிவமயனே
குருவாரந் தோறும் வருவாயெம் யோக குருபரனே.

வக்கிர நெஞ்சரும் வன்கண் ணருஞ்செயும் மாயமெல்லாம்
உக்கிர கோர உருத்தாங்கி ஓங்கும் உலகத்திலே
அக்கிர மங்க ளழிய ஆன்மீக மலர்ந்தெழவே
சுக்கிர வாரம் வருவாய் சிவயோக சொற்குருவே.

நினைவார் நினைவில் நிழலாடு மன்பின் நிருமலனே
மனமே தொடர்ந்து நினைநாட நின்று மகிதலத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமேயு முன்னத் தியானத்திற் கண்டு தெளிவதற்குச்
சனிவாரந் தோறும் வருவாய் சிவயோக தற்பரனே.

மாட்டிவிட் டானயன் பூலோக வாழ்வில் மதிமயங்கச்
சேட்டைவிட் டார்துட்ட மூவரோ டைவர் சிறிதிரங்கிக்
கூட்டிவிட் டான்சிவன் நின்னடிக் கென்னைக் குருபரனே
மீட்டுவைப் பாய்சிவ யோகா எந்நாளும் விலகலற்றே.

மாமறை போற்றும் சிவயோகர் வார வணக்கமிதைத்
தாமறிந் தோதுவர் சற்குண ராவார் தளர்வறியார்
பூமியில் நீடு பெருவாழ்வு வாழ்ந்துவிண் போயடைவார்
நாமிது சொன்னோம் சிவன்செய லாக நடக்கட்டுமே.


# R & S AUTO SALES

**Top Quality New & Used Cars**

**வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்**



RADHA

**TEL: 416-412-3838**
**FAX: 416-412-1174**

**4362 Sheppard Ave. East,**
**Scarborough, ON.**
**Between Brimley & Midland**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. கோயில் தரிசனம்

கும்பிட்டுக்கொண்டே வாகனத்தால் இறங்கினேன். கோயிலின் வடக்குப் பக்கத்து அறையில் காலணிகளைக் கழற்றி, தலைக்கும் கால்களுக்கும் சிறிது நீர் தெளித்துப் பூதசுத்தி செய்தபின்,

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

என்ற தேவாரத்தை உச்சரித்துக்கொண்டு கோயிலினுள் சென்றேன். வெள்ளிக்கிழமையல்லவா? அடியார்கள் பலர் மாலைப் பூசையைக் காண ஆயத்தமாக நின்றனர். திரு. கந்தசாமி அவர்கள் வந்து கை குலுக்கி வரவேற்றார். பூசை முடிவில் சிறிது நேரம் பேசும்படியும் கேட்டுக் கொண்டார். உதயகுமார் தம்பதிகளும் ஏற்கனவே வந்துவிட்டார்கள்.

சிறிது நேரத்திற் பூசை தொடங்கியது. பிள்ளையாரை உற்றுப் பார்த்தேன். அவர் அருட்பார்வையால் என்னை வரவேற்பது போன்ற ஓர் உணர்வு என்னுள் எழுந்தது. அலங்கார நகைகளையும் மாலைகளையும் அணிந்தவாறு அவர் அழகாகவே வீற்றிருந்தார்.

மூலத்தானப் பூசையைத் தொடர்ந்து பரிவார மூர்த்திகளுக்குப் பூசைகள் நடந்தன. பரிவார மூர்த்திகளாக இலட்சுமிதேவி, வள்ளி தெய்வானை சகிதம் சுப்பிரமணியர், நந்தகோபாலர் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். இவர்களுக்கும் வசந்த மண்டப மூர்த்திகளுக்கும் நவக்கிரகங்களுக்கும் வைரவப் பெருமானுக்கும் முறையாகப் பூசைகள் நடந்து முடிந்தபின் ஒலிவாங்கி ஒன்றை என்முன் கொண்டுவந்து நிறுத்தினார்கள். குருக்கள் ஐயா முன்னுரையாகச் சில வார்த்தைகளைப் பேசி எல்லோரையும் அமர்ந்திருக்கும்படி கேட்டுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் எதற்கு? என்ற கேள்வியோடு எனது பேச்சை ஆரம்பித்தேன். கோயில் வழிபாட்டுத் தலமாக இருப்பதோடு எமது கலாச்சாரப் பாரம்பரியத்தின் சொத்தாகவும் சின்னமாகவும் விளங்கும் மகிமையை எடுத்து விளக்கினேன். ஒல்லாந்து வாழ் சைவப் பெருமக்களின் ஆன்மீக ஈடேற்றத்துக்கும் கலைகலாச்சார வளர்ச்சிக்கும் உதவும் வகையில் ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் ஆலயத்தைக் கட்டி எழுப்பிய நிர்வாகத் தொண்டர்களையும் அவர்களுக்கு உதவியாக இருக்கும் அடியார்களையும் பாராட்டினேன்.

எல்லாம் விநாயகப் பெருமான் திருவருளேயாகும். அவரே புலம்பெயர்ந்து இங்கு வாழும் தனது அடியாருக்கு அருள்பாலித்தற் பொருட்டு இப்படி ஒரு கோயிலைக் கட்டுவித்திருக்கிறார். அவரை வணங்கிவரும் உங்களுக்கு எவ்வித குறையும் வராது.

மேலைத் தேயக் கோயில்கள் சிலவற்றில் ஆடம்பரங்கள் மிகுந்து வருகின்றன. இன்னுஞ் சில, வியாபார நிலையங்களைப்போல் விளம்பரங்களைச் செய்து வருகின்றன. சில கோயில்களில் போட்டி மனப்பான்மையுடன் பூசைகளும் பிற நிகழ்ச்சிகளும் நடத்தப்படுவது வெளிப்படையாகவே தெரிய வருகிறது.

இந்தக் கோயிலிற் காலடி வைத்ததும் ஆன்மீக அலை வீசுவதை என்னால் உணர முடிந்தது. கோயில் பக்தர்களைக் கவரும் முறையிலும் பக்தியை வளர்க்கும் வகையிலும் அடக்கமான அளவில் அழகாகக் கட்டப்பட்டுள்ளது.

மேலும் தாயகத்தில் நாம் பழக்கப்பட்ட ஆகம முறையில் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளமை உங்களுக்குள் சமய விதிகளை நன்கறிந்த பெரியார்கள் இருப்பதையும் எடுத்துக் காட்டுகின்றது. அதனால் நானும் இனிமேல் பேசுவதைக் கொஞ்சம் யோசித்துத்தான் பேசவேண்டும் என்பதையும் உணர்ந்து கொள்கிறேன்' என்றெல்லாம் ஏறத்தாழ 25 நிமிடங்களுக்குச் சொற்பொழிவாற்றினேன்.

ஐயாவும் மெல்லிதான சிரிப்புடன் காளாஞ்சியைத் தந்தார்.

அடியார்கள் சென்ற பின்னரும் நிர்வாக சபையினர் நாளைய கொடியேற்றத் திருவிழா ஒழுங்குகளைக் கவனித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தனர். நான் கோயில் வடக்குப் புறத்து அறையில் இருந்த அறிவித்தற் பலகை விடயங்களை மேய்ந்தேன். திருவிழா விஞ்ஞாபனம், எனது வருகை பற்றிய அறிவித்தல் எல்லாம் அதில் தொங்கிக் கொண்டிருந்தன.

அவற்றுள் ஒன்று கோயிலின் மே மாத வரவு செலவுக் கணக்கு விவரம். அதனை உயர்த்திய பொழுது அதற்குக் கீழ் ஏப்பிரல் மாதத்துக் கணக்குகளும் காட்டப்பட்டிருந்தன. அதாவது, மாதாமாதம் வரவுசெலவுக் கணக்கை நிர்வாகம் அடியார்களுக்கு அறிவித்து வருகிறது. கோயில் கட்டிமுடித்த சாதனை ஒருபுறமிருக்க, கணக்கு வழக்குகளிலும் நிர்வாகம் நேர்மையாக இருப்பதையும் எந்த அளவுக்கு அவர்கள் திட்டமிட்டுச் செயற்படுகிறார்கள் என்பதையும் இது எனக்கு எடுத்துக் காட்டியது.

இத்தகைய திறமை சான்ற நிர்வாக சபையிற் பின்வருவோர் தற்பொழுது அங்கம் வகிப்பதாக அறிந்தேன்.

திரு. க. உதயகுமார், தலைவர்
திரு. ந. சிவநேசன், உதவித் தலைவர்
திரு. செ. இரவீந்திரன், பொருளாளர்
திரு. கு. மனோராகவன், உதவிப் பொருளாளர்
திரு. செ. கந்தசாமி
திரு. ஐ. நந்தகுமார்
திரு. க. இராஜதுரை
திருமதி புஷ்பா பொன்னுத்துரை
திரு. மகேந்திரன்
திரு. எஸ். யோகநாதன் (ஈசன்)
திரு. பொ. பிரபாகரன்
திரு.ஏ. குமாரசாமி அவர்கள் கணக்குப் பரிசோதகராகத் தொண்டாற்றுகின்றார்.

திரு. கந்தசாமி அவர்கள் என்பக்கமாக வந்தார்கள். 'நிர்வாக சபையின் பணிகள் நிகரற்றவை. அறிவித்தற் பலகைச் செய்திகளிலிருந்து எல்லாவற்றையும் திட்டமிட்டுச் செயற்படுவது நன்றாகத் தெரிகிறது' என்றேன். 'ஏதோ முடிந்த அளவுக்குச் செய்கிறோம் ஐயா. எல்லாம் விநாயகப் பெருமான் அருள்' என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கமாக. கூடவே ஸ்ரீவரதராஜ செல்வ விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக மலர் ஒன்றையும் கையளித்தார்.

இரவு 10:00 மணி அளவில் தலைவர் திரு. உதயகுமார் அவர்கள் நாங்கள் தங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வீட்டுக்குத் தொண்டர் ஒருவரின் வாகனத்தில் எங்களை அனுப்பி வைத்தார். பின்னர் தானும் குடும்பத்துடன் அங்கு வந்து சேர்ந்தார்.

## ஆத்மஜோதிப் பத்திரிகை மணிவிழா

ஆதமஜோதிப் பத்திரிகை 1948ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன் 60வது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு கனடா இந்து சமயப் பேரவை 2008 ஆண்டுக் கோடைகாலத்தில் மணி விழாவை நடத்தவிருக்கிறது. விழாவை முன்னிட்டு மணிவிழா மலர் ஒன்று வெளியிடவிருப்பதால் கட்டுரைகள் வாசகர்க ளிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. மார்ச் 31, 2008க்கு முன்பு கட்டுரைகளை பத்திரிகை முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


# S & S Engravers

**வெற்றிக் கேடயங்கள், பெயர்க்கோர்வைகள், வாழ்த்து மடல்கள், அனைத்தும் உங்கள் தேவைகேற்ப**
**குறைந்த விலையில்**

Name plate, Plaques, Awards, Directional Signs, Logos, Donor Recognition, Systems & Panels,




**285 Progress Ave. #08**
**Scarborough, Ont.**
**Tel: 416-335-6819, Cell: 416-875-3500**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்நாடு சிதம்பரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட புலவர், திருமுறைக் கலைஞர்
# சுந்தரேசன்பிள்ளை ஐயா அவர்கள்



இவர் சைவத்தின் மேல் உள்ள பற்றினாலும், திருமுறையில் உள்ள தீராத காதலினாலும் தன் தள்ளாத வயதிலும் சைவசமய வளர்ச்சிக்காக அயராது உழைப்பவர். தன்னிச்சையாக நடக்க முடியாத நிலையிலும் என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற அப்பர் சுவாமிகளின் வாக்கைத் தாரக மந்திரமாகக் கொண்டு செயற்படுபவர்.

ஐயா, பல நூற்றுக்கணக்கான அடியார்களுக்குச் சிவதீட்சை கொடுத்தவர். இன்றும் தன் தள்ளாத வயதிலும் அப்பணியைத் தொடர்ந்து செய்பவர். 2000க்கு மேற்பட்ட திருமுறைத் திருமணங்களை இதுவரை குருவாக இருந்து நிறைவேற்றி வைத்துள்ளார். சிறந்த கலைஞரான பெரியார் அவர்கள், நல்ல ஆற்றல் உள்ள கவிஞருமாவார். சைவத்தின் மேல் செலுத்தும் அன்புக்கும் விசுவாசத்திற்கும் தள்ளாத வயதிலும் அவர் சிந்தும் கண்ணீரே அடையாளம் ஆகும். பெரியார் அவர்கள் 1923ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தில்லை திருமுறைக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை 1968ஆம் ஆண்டு தொடக்கம் ஏற்றுச் சிறப்புடன் நடத்தி வருகின்றார்.

## ஈழத்தைச் சேர்ந்த
## சித்தாந்த சரபம் செப்பறைச் சுவாமிகள்

இவர் தென் இந்தியாவில் நெல்லையில் செப்பறை என்ற சிற்றூரில் வசித்து வந்தார். சைவசித்தாந்தத்தில் பாண்டித்தியம் உள்ள சுவாமிகள் பல அளப்பரிய பணிகளைத் தமிழ் நாட்டில் செய்துள்ளார். 1923ஆம் ஆண்டு தில்லை திருமுறைக்கழகம் அவர் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தில்லை நடராசப் பெருமானைத் தரிசிக்க வந்த செப்பறை சுவாமிகள் சிதம்பரம் செங்கழு நீர் பிள்ளையார் கோயில் தெருவில் சிவஞான திருத்தணி என்ற சிவபூசைக் கட்டிடம் உருப்பெறவும், இப்பகுதியில் பல விநாயகர், மற்றும் சிவன் கோயில்கள் அமைப்பதற்கும் மூலகாரணமாய் இருந்தார் என்று அவருடைய வரலாறு தெரிவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயப் பேரவைச் செய்திகள்

ஓம் நமசிவாய

## இந்திய திருத்தல யாத்திரை 2007

கனடா இந்து சமயப் பேரவையின் திருக்கூட்ட அடியார்கள் மூன்றாவது முறையாக இந்திய திருத்தல யாத்திரையை பேரவையின் செயலாளரும் திருக்கூட்ட ஒருங்கிணைப்பாளருமாகிய சிவ முத்துலிங்கத்தின் தலைமையின் கீழ் மேற்கொண்டனர்.

2003ஆம் 2005ஆம் ஆண்டுகளில் மேற்படி யாத்திரையை மேற்கொண்ட பொழுது மணிவாசகப் பெருமான் கால் பதித்து திருவாசகம் ஓதிய ஆலயங்களில் திருவாசக முற்றோதலை ஓதினர். 2007ஆம் ஆண்டு திருமுறை பாடிய அருளாளர் கள் ஆட்கொள்ளப்பட்ட ஆலயங்களில் திருமுறை முற்றோதுவது என்ற திடசங்கற்பத்துடன் யாத்திரையை மேற்கொண்டனர்.

ஏற்கனவே திட்டமிட்டபடி சம்பந்தப் பெருமானுக்கு அம்மை, அப்பர் காட்சி கொடுத்து ஞானப்பால் பருக்கிய சீர்காழிப்பதியில் முதலாம் திருமுறையை ஓதத் தொடங்கினர். தொடர்ந்து சம்பந்தர் சிவபெருமானிடம் இருந்து பொற்றாளம் பெற்ற திருக்கோலக் காவிலும் நந்தனாரின் வழிபாட்டுக்காக நந்தி விலகிக் கொடுத்த திருப்புன்கூரிலும், ஆச்சாள்புரம் என அழைக்கப்படும் நல்லூர் பெருமணத்திலும் திருஞானசம்பந்தரின் முதல் மூன்று திருமுறை களையும் ஓதிப் பூர்த்தி செய்தனர். சம்பந்தர் தன் திருமணத்திற்கு வந்தவர்களுடன் சிவசோதியில் கலந்த ஆலயமே ஆச்சாள்புரம் ஆகும்.

அப்பர் பெருமானுக்குச் சூலை நோயைக் கொடுத்து ஆட்கொண்ட திருவதிகை திருவீரட்டானத்திலே நான்காம் திருமுறையை ஆரம்பித்துத் தொடர்ந்து திருவீழிமிழலை, திருப்பள்ளி முக்கூடல் திருக்கோயில் வீரட்டானம் ஆகிய தலங்களில் திருநாவுக்கரசு நாயனாரின் 4, 5, 6ஆம் திருமுறைகளைப் பூர்த்தி செய்தனர்.

சுந்தரமூர்த்திநாயனாரின் ஏழாம் திருமுறையை சுந்தரரை அந்தணர் வடிவில் வந்து ஆட்கொண்ட திருவெண்ணெய் நல்லூரில் முற்றோதினர். எட்டாம் திருமுறையில் உள்ள திருவாசகத்தை திருப்பெருந்துறை ஆவுடையார் கோயிலில் முற்றோதினர். இவ்ஆலயம் மணிவாசகருக்குக் குருவடிவாக வந்து திருவடிதீட்சை கொடுத்த ஆலயமாகும். திருக்கோவையாரைத் திருவையாறு ஆலயத்திலும், ஒன்பதாம் திருமுறையை தஞ்சைப் பெரிய கோயிலிலும் முற்றோதினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தை திருவாவடுதுறை ஆலயத்தின் திருமூலர் சந்நிதியில் இருநாட்கள் முற்றோதினர். இரண்டாவது நாள் திருவாவடுதுறை ஆதீனச் சந்நிதானத்தைத் தரிசித்து சுவாமிகளின் அருளாசிகளைப் பெற்றனர்.

11ஆம் திருமுறையை திருநாரையூர் ஆலயத்திலும், ஓமப்புலியூர் ஆலயத்திலும் முற்றோதினர்.

12ஆம் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணத்தை சேக்கிழார் பெருமான், பெரியபுராணத்தை இயற்றிய சிதம்பரம் நடராசர் சந்நிதியில் உள்ள ஆயிரம் கால் மண்டபத்தில் மூன்று நாட்கள் முற்றோதி டிசெம்பர் 8ஆம், 9ஆம் திகதிகளில் பெரிய புராண விழாவை மேற்கொண்டனர்.

## பேரவை நடத்திய பெரியபுராண விழா

பெரிய புராண விழா இரு நாட்களும் சிதம்பரம் கோதாண்டராமன் திருமண மண்டபத்தில் சிவபூசையுடன் ஆரம்பமாகியது. இரு நாட்களும் நாற்பத்தைந்து சிவபூசைச் செல்வர்கள் கலந்து கொண்டு சிவபூசை செய்தனர். சிவபூசையைத் தொடர்ந்து மேற்படி மண்டப முன்றலில் திருமுறைப் பாராயணத்துடன் திருமுறைச் செல்வர் சிவ முத்துலிங்கத்தினால் இடபக் கொடி ஏற்றப்பட்டு விழா ஆரம்பமாகியது.



பீடாதிபதிகள் முன்னிலையில் தில்லை திருமுறைக் கழகத் தலைவர் புலவர் சுந்தரேசன்பிள்ளை அவர்கள் உரையாற்றுகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமுறை முற்றோதிய பேரவைத் திருக்கூட்டத்தினரும் தமிழ் நாட்டு அடியார்களும்



யானையில் சிதம்பரம் மாடவீதி வீதியுலா வரும்பொழுது

தில்லை திருமுறைக்கழகம், சிதம்பரம் அப்பர் தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் நடந்த விழாவிற்கு தில்லை திருமுறைக்கழகத் தலைவர் முதுபெரும் புலவர் சுந்தரேசன்பிள்ளை ஐயா அவர்கள் ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட்டார்.

டிசெம்பர் எட்டாம் திகதி காலை 9 மணிக்கு பன்னிரு திருமுறைப் பூர்த்தி அபிசேகம் சிதம்பரம் நடராசர் சந்நிதியில் ஆரம்ப மாகியது. காலை 10:30 மணிக்கு பேரவையின் திருமுறைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழுமலர் வெளியீடும், அருள்ஞானி ஆறு வீரப்பனின் திருமந்திரப் பேர் உரை குறுந்தட்டு வெளியீடும் நடைபெற்றன. விழாவிற்கு கயிலைப் புனிதர் சிவத்திரு உமாநாத தீட்சிதர் தலைமை ஏற்றார்.

அருள்ஞானி ஆறு வீரப்பன், கோமல் சேகர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். சிதம்பரம் மௌனதேசிகர் ஆதீன மடாதிபதி சிவத்திரு சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளாசி வழங்கினார்.

மதிய போசனத்தின் பின் தருமபுர ஆதீனப்புலவர் முனைவர் மு. சிவச்சந்திரன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். சிறப்புரையைத் தொடர்ந்து திருமுறைப்பண்ணிசை நடைபெற்றது.



திருமுறை முற்றோதிய திருக்கூட்ட அடியார் பேரூர் ஆதீன இளவரசு மருதாசலம் அடிகளிடம் சான்றிதழ் பெறும் பொழுது

## 09-12-2007 பெரிய புராண விழா

காலை நடைபெற்ற சிவபூசையைத் தொடர்ந்து மதியம் சிறப்பான மாகேசுவரர் பூசையும் சிவபூசைச் செல்வர்கள் வழிபாடும் நடைபெற்றன. மாகேசுவரர் பூசையின் மகத்துவத்தைப் பற்றி திருமுறைக் கலைஞர் சுந்தரேசன் பிள்ளை அவர்கள் விளக்கவுரை செய்தார்.

### சிவனடியார்கள் புடைசூழ யானை மீது பன்னிரு திருமுறை வீதியுலா

மாலை மூன்று மணிக்குச் சிதம்பரம் மாட வீதியைச் சுற்றி திருமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்வலம் ஆரம்பமாகியது. மங்கல இசை முழங்க ஓதுவார் மூர்த்திகள் திருமுறைப் பண்ணிசை பாடவும் யானையின் முன்பு சிவநடன வல்லுநர் சிவதாண்டவம் ஆடிச் செல்லவும் திருமுறையை ஓதிய அடியார்கள் திருமுறையை சுமந்து செல்லவும் யானை மீது திருமுறை ஊர்வலம் தொடர்ந்தது.

நூற்றுக் கணக்கான அடியார்கள் புடைசூழ, வீதியோரம் நின்று மக்கள் வணங்கி வாழ்த்த பூவுலகக் கைலாயம் என அழைக்கப்படும் சிதம்பர நடராசப் பெருமானின் மாடவீதியில் இரு மணித்தியாலங்கள் ஊர்வலம் தொடர்ந்தது.

பேரூர் ஆதீன இளவரசுப்பட்டம் மருதாசலம் அடிகள், சிதம்பரம் மௌன மடப்பீடாதிபதி சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புகலூர் ஆதீனப் மடாதிபதி ஆகியோர் முன் எழுந்தருள ஊர்வலம் தொடர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



சிதம்பரம் மௌனமட பீடாதிபதி சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் பேரவையின் வெளியீடான திருமந்திரம் குறுந்தட்டைப் பெறும் பொழுது

சிதம்பரம் கிழக்குக் கோபுரவீதியில் ஊர்வலம் முடிவுற்றது. தொடர்ந்து ஆயிரம் கால் மண்டபத்தில் நடைபெற்ற விழாவிற்கு G. R. A. சம்பந்த தீட்சிதர் தலைமை ஏற்றார். திருமுறை முற்றோதிய அடியார்கள் யாவரும் பேரூர் ஆதீன இளவரசுப் பட்டம் மருதாசலம் அடிகளால் கௌரவிக்கப்பட்டனர். மௌனமடம், திருப்புகலூர் ஆதீனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடாதிபதிகளின் அருளுரையைத் தொடர்ந்து வித்துவான் மு. கணபதி அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

பேரவையின் செயலாளர் சிவமுத்துலிங்கம் அவர்களுக்கு 'சிவராஜசிங்கம்' என்னும் பட்டத்தை வழங்கி பேரூர் ஆதீன இளவரசு, மருதாசலம் அடிகள் கௌரவித்தார். சிவ முத்துலிங்கம் அவர்கள் பதிலுரை வழங்கினார்.

தொடர்ந்து பண்ணிசை நடைபெற்று இரவு 9 மணிக்கு விழா இனிது நிறைவேறியது.

இரு நாட்களிலும் புலவர் கோ. முத்தையாபிள்ளை அவர்கள் அறிவிப்பாளராகச் செயற்பட்டார். விழா ஏற்பாடுகளை அப்பர் தொண்டு நிறுவனச் செயலாளர் வீ. சந்திரசேகரம் அவர்கள் கவனித்துக் கொண்டார். தில்லை திருமுறைக் கழகப் பணியாளர்களும், அப்பர் தொண்டு நிறுவனத் தொண்டர்களும் மேற்படி விழா இனிது நடைபெற அருந் தொண்டாற்றினர்.

**திருவெம்பாவை காலத்தில் திருவாசகம் முற்றோதல்**

பேரவையின் திருக்கூட்டத்தினரால் அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் திருவெம்பாவை காலத்தில் 10 நாட்களும் திருவாசகம் முற்றோதப்பட்டது.

**திருவாசகவிழா**

24-12-2007 திங்கட்கிழமை ஆருத்திரா தரிசனத்தன்று பேரவையினரால் தலைவர் திரு. வி. கந்தவனம் அவர்களின் தலைமையின் கீழ் திருவாசக விழா நடத்தப்பட்டது. கணேச சிவபாலக் குருக்கள் ஆசியுரை வழங்கினார். பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். விசேட அபிசேக ஆராதனையும் இடம்பெற்றது.

**நாவலர் பெருமானின் 128ஆவது குருபூசை**

நாவலர் பெருமானின் குருபூசை மார்கழி 2007 அவருடைய குருபூசைத்தினத்தன்று வெகுவிமரிசையாக பேரவையினரால் நடத்தப்பட்டது. தலைவர் வி. கந்தவனம் தலைமை தாங்கினார். ஆலயக் குருக்கள் சிறப்புரையாற்றினார். அபிசேக ஆராதனைகளும் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதம்பர இரகசியம்

அருள்ஞானி ஆறு. வீரப்பன், சிதம்பரம்

**பரிபூரணம்**

இறைவனின் வியாபக நிலையை "பூர்ணம்" என்று உபநிடதங்கள் கூறுகின்றன.
"அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது"
என்பது தாயுமானவர் அருள்வாக்கு.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்சோதி" என்பதும் "குறைவிலா நிறைவே" என்பதும் மணிவாசகர் மணிமொழிகள். எனவே இறைவன் பரிபூரணன் என்பதும் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கிறான் என்பதுமே அவனது உண்மை நிலையாகும். உண்மை இப்படியிருக்கச் சில சமயங்கள் இறைவன் அருவ மானவனே என்றும், சில சமயங்கள் இறைவன் உருவமானவனே என்றும், வேறு சில சமயங்கள் அவன் அருஉருவமானவனே என்றும் கூறுகின்றன. யானையின் காலைத் தொட்டுப் பார்த்த ஒரு குருடன் யானை 'தூண்' போன்றது என்கிறான். யானையின் காதைத் தொட்டுப் பார்த்த மற்றொரு குருடன் யானை 'முறம்' போன்றது என்கிறான். இதுபோலத்தான் இச் சமயவாதிகளும் இறைவனின் முழுமையைக் காணாது, ஒரு நிலையை மட்டுமே அறிந்துள்ளனர். சைவ சமயந்தான் இறைவனின் பரிபூரண உண்மை நிலையை உலகுக்கு உள்ளவாறு உணர்த்தியிருக்கிறது.

**சைவ நெறி**

மனிதன் பரிணாம வளர்ச்சிக்கு உரியவன், பாலகனாக ஓடி விளையாடும் பட்டாம்பூச்சிப்பருவம் ஒன்று. இளைஞனாகக் கல்வி கேள்விகளில் சிறக்கும் ஆற்றல்மிக்க பருவம் மற்றொன்று, அறவழியில் பொருளீட்டி தனது குடும்பத்தைப் பேணிக் காக்கும் பருவம் பிறிதொன்று. உடம்பு தளர்வெய்தி ஓய்வு கொள்ளும் பருவம் இறுதி நிலை.

இந்த 'ஆறிலிருந்து அறுபதற்குள்' மனிதன் பொருளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேட வேண்டும், அருளையும் தேட வேண்டும். பொருளைத் தேடாதவன் இந்த உலகத்தை இழக்கிறான். அருளைத் தேடாதவன் அந்த உலகத்தை (சிவபோகம்) இழக்கிறான். நமது சைவப்பெருமக்கள் நமக்கு மண்ணில் நல்ல வண்ணம் வாழும் வழியைக் காட்டியிருக்கிறார்கள். அவ்வாறு நல்ல வண்ணம் வாழும் பொழுதே இறைவனை அடைவது எப்படி? என்கிற வழியையும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்கள் மூலம் காட்டியிருக்கிறார்கள்.


சிறுவயது பாலகனுக்குக் கண்ணுக்குப் புலனாகாத கடவுளை எளிதாகப் பற்றி வழிபட உருவமாகக் (உருவத் திருமேனி) காட்டினர். அவன் அறிவு வளர வளர கேள்விகளைக் கேட்க ஆரம்பிக்கிறான். கண்ணுக்குப் புலனாகாத கடவுளுக்கு உருவம் உண்டா? என்று கேட்கிறான். அப்பொழுதுதான் சைவம் அவனுக்கு அடுத்த படிநிலையை (அருஉருவத் திருமேனி) அருஉருவ வழிபாட்டைத் தெளிவாகக் காட்டுகிறது.

கடவுளுக்குச் சொரூப நிலையில் உருவமில்லை என்பது உண்மைதான் என்றாலும் கடவுள் பேரறிவும், பெருங்கருணையும் மிக்கவர் ஆதலின், யார் யார் எவ்வெவ்வடிவங்களில் நினைந்து வழிபடுகின்றார்களோ அவ்வவ்வடிவங்களில் வந்து அருள்செய்வார். அந்த வடிவங்கள் யாவும் இறைசைதன்யத்தின் குறியீடுகளே. அந்தக் குறியீடுகளில் எழுந்தருளி அவர் அருள்பாலிக்கிறார். அவை உருவமாகவும் இருக்கலாம். அருவுருவமாகவும் (சிவலிங்கம்) இருக்கலாம். எனவே இறைசைதன்யத்தின் குறியீடாகிய (சிவலிங்கம்) அருஉருவத் திருமேனியை நீ வழிபட விரும்பு வாயாகில் அதுவும் சாலச்சிறந்ததே என்று சைவம் அவனுக்கு சிவலிங்க வழிபாட்டின் சிறப்பினையும், சிவபூசை முறைகளையும் போதிக்கின்றது. அவனது பக்தியும், அனுபவமும் பெருகப்பெருக அவனது அறிவும் விரிவடைகின்றது. அவனது பகுத்தறிவு மேலும் ஆராய்கின்றது. இறைவன் சொரூப நிலையில் கண்ணுக்குப் புலப்படாமல் தானே இருக்கிறான். எனவே இறைவனை அருவமாகவே கருதி வழிபடலாம் அல்லவா? என்ற கேள்வி அவனுக்கு எழுகின்றது. இந்த நிலையில் சைவம் அவனுக்கு யோக வழிபாட்டு முறைகளைக் கற்பிக்கின்றது. அவன் கண்களை மூடி இறைவனை அகத்திலே அருவமாகக் கருதி (அருவத்திருமேனி) வழிபட ஆரம்பிக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வழிபாட்டு நிலைகள் நான்கு**




இதுகாறும் சரியை, கிரியை, யோக முறைகளிலே, முறையே இறைவனின் உருவத் திருமேனியையும், அருஉருவத் திருமேனியையும், அருவத் திருமேனியையும் வழிபட்டு வந்ததன் பயனாக, இறைவன் திருவருளால் ஞானநிலையை வந்தடைகின்றான். ஞானத்தால் இறைவனைத் தொழுகின்றான். ஞானவழிபாட்டின் பயனாக இறைவனின் முழுமையை, பரிபூரண நிலையை, சொரூப நிலையை அனுபவமாக உணரப்பெற்று எல்லையில்லாப் பேரின்பமாகிய சிவபோகத்தினுள் திளைக்கின்றான்.

ஞானநெறியையும், அதற்கு சாதனங்களாக விளங்குகின்ற சரியை, கிரியை மற்றும் யோக நெறிகளையும் ஒருங்கே கொண்டுள்ளது சைவ சமயம். இச் சமயத்தின்கண் உருவ வழிபாடு, அருஉருவ வழிபாடு மற்றும் அருவ வழிபாடு ஆகிய அனைத்தும் ஒருங்கே அமைந்துள்ளன. அவரவரது பக்குவத்திற்கு ஏற்ற வழிபாட்டைச் செய்து உய்வடைகின்றனர். ஏனைய சமயங்கள் உருவம், அருஉருவம், அருவம் முதலிய வழிபாடுகளில் ஏதாவது ஒன்றினை மட்டுமே பின்பற்றுகின்றன. எல்லா நிலைகளையும் ஒருங்கே காட்டும் நிலையினை அச்சமயங்களில் காணமுடியாது. அந்த நிலையைத் தில்லை மன்றினுள் காணலாம். மேலும், எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய அறிவுப்பெருவெளியே அங்கே முதன்மையாகக் காணப்படுவதால் எந்த மார்க்கத்தைச் சேர்ந்தவராயினும் கைகூப்பித் தொழுது நிற்பர். இக்கருத்தை

“சன்மார்க்க ஞானமதின் பொருளும்வீறு
சமய சங்கேதப் பொருளுன் தானொன்றாகப்
பன்மார்க்க நெறியினிலுங் கண்டதில்லை
பகர்வரிய தில்லைமன்றுள் பார்த்த போதங்
கென்மார்க்கம் இருக்குதெல்லாம் வெளியே என்ன
எச்சமயத் தவர்களும் வந்திறைஞ்சா நிற்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்மார்க்க நெஞ்சமுள்ள எனக்குந் தானே
கண்டவுன் ஆனந்தங் காண்டலாகும்"

என்கிற அருட்பாடலால் விளக்கியருளுகின்றார் தாயுமானவர். தில்லையில் நான்கு வழிபாட்டு நிலைகளும் உண்டு.

உருவம் - நடராசப்பெருமான்
அருவுருவம் - மூலநாதர்
அருவம் - சிதம்பர ரகசியம்

**சிதம்பர இரகசியம்**

தில்லையிலே சிதம்பர இரகசிய வழிபாட்டில் திரை விலகியதும் தீபம் காட்டப்படுகின்றது. அப்போது அங்கு திருவம்பலச் சக்கரமும், தங்க வில்வமாலையும் நமது கண்களுக்குப் புலனாகின்றன. அவை இரண்டும் இரகசியமன்று. அவ்விடத்தில் இறைவன் அருவத்திருமேனி கொண்டு எழுந்தருளியிருப்பதாகப் பாவித்துத் தொழுதலே சிதம்பர இரகசிய வழிபாடாகும். (இந்நிலை கண்ணுக்குப் புலப்படாதிருத்தலின் 'இரகசியம்' என்கிறோம்)

சிதம்பர இரகசியத்தை அறியும் நிலை

சிதம்பர இரகசிய வழிபாட்டில் இறைவனை அருவமாகப் பாவித்து வழிபடுதல் யோகநிலை ஆகும். யோக நிலை என்பது சிதம்பர இரகசியத்தை அறியும் நிலை.

சிதம்பர இரகசியத்தை உணரும் நிலை

தில்லை மன்றாகிய அருள்வெளியைத் திருவருளால் உணர்ந்து நிட்டை கூடுதல் ஞானநிலை ஆகும். ஞானநிலை என்பது சிதம்பர இரகசியத்தை உணரும் உணர்வு நிலை ஆகும். இதுவே ஞானத்தால் இறைவனைத் தொழும் நிலை எனப்படும்.

ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்
ஞானத்தால் தொழுவேனுனை நானலேன்
ஞானத்தால் தொழுவார் தொழக்கண்டு
ஞானத்தாலுனை நானும் தொழுவனே.- திருமுறை 5 - 205 - 3

இந்நிலை உருவம், அருஉருவம், அருவம் ஆகிய முதல் மூன்று நிலைகளையும் கடந்த நான்காம் நிலையாகிய உணர்வு நிலையாகும்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் சாட்சி

## திருமதி தங்கம்மா மகாலிங்கம்

அன்று ‘‘தோடுடைய செவியன் விடையேறி’’ வந்து எனக்குப் பாலூட்டினார் என்று சாட்சி சொன்ன ஞானக்குழந்தையின் வரலாறு 6ஆம் நூற்றாண்டு தொட்டு இன்றுவரை சாட்சி பகர்கிறது. அகத்தியர் தொட்டு தொல்காப்பியர் வரை எழுதிய நூல்களும் பாடிய பாடல்களும் சாட்சி சொல்கிறது. வீரமாமுனிவர் தொட்டு இன்றைய காசியானந்தன் வரை தமிழின் தமிழினத்தின் வரலாறு சொன்ன நூல்களும் எழுத்துக்களும் சாட்சி பகர்கின்றதெனின் இந்த நூற்றாண்டில் வாழ்ந்த சிவத்தொண்டர் முத்தையா சுவா மிகளின் வரலாறும் எம்கண்கூடாய் கண்ட காட்சிகளையும் செவ்விகளையும் நாம் எழுதி வைப்பதின் மூலமே எதிர்கால சந்ததிக்கு இட்டுச் செல்ல முடியும். எனவே வாருங்கள் நாளைய சந்ததிக்கு இன்று வாழும் நாமே சாட்சியாவோம்.

வாழ்வின் உயிர்நாடியாகும் சமயங்கள் வாழ்க்கையின் வழிகாட்டிகளே. பிறவியிலே அரிய மானிடப்பிறவி பெற்ற நாம் நமக்கும் பிறர்க்கும் பயனாக வாழலாமென ஞானக்குழந்தை ஆகிய ஞானசம்பந்தர் வழிகாட்டியுள்ளார்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்ல∴துறும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளோடும் பெருந்தகை இருந்ததே

என்பதற்கமைய மண்ணில் நல்ல வண்ணம் வாழவேண்டுமானால் தினம் எண்ணும் எண்ணங்களும் காணும் காட்சிகளும் நல்லவையாக வேண்டுமென இருந்தும் நம்மிற் சிலர் முறையான சமயக்கல்வி படியாமலும், அறிவு நூல்கள் அறிந்தவர்கள் வழிநடத்தலின்றியும் இருப்பதால் எத்தனை கடவுள்கள், எத்தனை மதங்கள், எனக் குழம்பி வாதிட்டு அமைதியின்றி அல்லலுறுகிறார்கள். இப்படி வருமென்று உணர்ந்து போலும் அன்றே பட்டினத்துச் சுவாமிகளும் பாடியிருக்கிறார்.

ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு உயர் செல்வம்
அன்றென்றிரு பசித்தோர் முகம்பார் நல்லறமும் நட்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றென்றிரு நடுநீங்காமலே நமக்கிட்டபடி
என்றென்றிரு மனமே உனக்குபதேசமிதே.

அதனால் தெய்வம் ஒன்றே என்பது தெளிவாகிறது. அன்பே சிவம் அருளே நெறியாகக் கொண்டு வாழ்ந்த நாயன்மார்கள் வரலாறுகளும் அறிந்ததே.

முன்செய் தவப்பயனால் இன்செய் நன்னிலமாம். நம் தாயகத்திலும் ஆறுமுகநாவலர், யோகர்சுவாமிகள், ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் போன்ற பலர் வாழ்ந்திருக்கிறார்கள்.

அவர்களில் 20ஆம், நூற்றாண்டில் வாழ்ந்த ஞானசுரபி முத்தையா சுவாமிகள், சைவமக்களின் விழிப்புணர்ச்சிக்கு அரும்பாடுபட்டார் என்றால் மிகையாகாது. சொல்மட்டுமன்றி செயல்வீரர் என்பதே சாலப் பொருத்தமாகும்.

“மக்கள் பணியே மகேசன் பணி” எனப்பதியும் வண்ணம் தூய இதயங்கள் உருவாக்கும் நற்கருத்துக்கள் பகிர்ந்திட 1950இல் ஆரம்பித்து 1983 வரை நடத்திய ஆத்மஜோதி சஞ்சிகை இன்றுவரை தொடர்வது இறை அங்கீகாரம் என்றே எண்ணத் தோன்றுகிறது.

அத்துடன் சொற்பொழிவுகள், கூட்டுப்பிரார்த்தனைகள், பாதயாத்திரை, சற்சங்க வட்டம், திருமுறை மகாநாடு, திருமுறை முற்றோதல், திருத்தல யாத்திரை போன்ற பல செயற்பாடுகளையும் செய்தார்.

இதற்கு ஆதரவாக இக்காலத்தில் அவரோடு தொடர்புடைய மக்கள் சான்று கூறுவர். இருந்தும் இப்படியும் நடந்ததா? என்ற கேள்வி எழுப்பும் மக்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களுக்குப் பதிலளிக்க அச்செயல்களோடு அனுபவப்பட்டவர்கள் மனந்தானே சாட்சியாகும்.

கிராமங்கள் தோறும் சென்று கூட்டுப்பிரார்த்தனை செய்தார் என்பதற்கு என்மனப் பதிவிலிருந்து ஒரு சம்பவம்.

1986, 1987 களில் வவுனியா மாவட்டத்தில் கிழக்குமூலை வடக்குப் பிரிவில் உள்ள கொந்தக்காரன் குளம், கோழியகுளம், பூவரசங்குளம், கிழவிகுளம், பாலைமோட்டை, குஞ்சுக்குளம் ஆகிய சில கிராமங்களில் உள்ள கோயில்கள் தோறும் சென்று கூட்டுப்பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்தி சமய வழிபாட்டை வலியுறுத்தியதோடு சமயப் பெரியாரின் குணநலப் பண்புகள் அறிந்து தெளியவும் அன்பு, பண்பு, அகிம்சை நிலைக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிவகுத்தார்.

ஒருநாள் காலை வவுனியாவிலிருந்து வந்து அழைத்த இடமெல்லாம் அகமகிழ்வோடு சென்று இரவு கோயில் குஞ்சுக்குளம் முத்துமாரியம்மன் ஆலயத்தில் தங்கி அடுத்த நாட்காலை வவுனியா சென்றார்கள். செல்லுமிடமெங்கும் நேரத்திற்கேற்ப உணவு, சிற்றுண்டி, தேநீர், குளிர்பானமென கொடுத்து மக்கள் தங்கள் மனவளத்தைக் காட்டினர். அந்த ஒருநாள் அற்புதமான பொழுது; எண்ண எண்ண இன்பம் பொங்கும். கண் நிறைந்த காட்சி ஆகும்.

உழவு இயந்திரப் பெட்டியே ஓடும் ஊர்தியாக
நான்கு மூலைகளிலும் நல்வாழைக்கன்றுகள்
நல்வரவாளராய் வனப்புடன் திகழ
மாவிலையும் தோரணமும் மாண்பு மிகு
ஐயாவின் வரவு கண்டு மகிழ்ந்தாட
ஒலிபெருக்கி ஓசை ஊரெல்லாம் முன்செல்ல
சிவனடியார் கூட்டத்துடன் ஆத்மஜோதி
சுவாமிகள் நின்ற காட்சி திருவருட்செல்வர் அப்பர்
சுவாமிகள் திங்களூர் சென்ற கோலமாக தோற்றியது.

ஒலிபெருக்கி ஓசை கேட்டதும், சிறுவர் கூட்டம் சில்வண்டுகளாய் கொட்டமிட்டதும், இளையவர், பெரியவர், எனப் பேதம் இன்றி துவிச்சக்கரவண்டிகளிலும் உந்துருளிகளிலும் மக்கள் அவர்களோடு போவதும் வருவதும் கண்கொள்ளாக் காட்சியாகியது.

அன்று அப்பகுதி மக்கள் அன்புக்கு உரியவராக இருந்த படியால் வவுனியாவில் உள்ள சமயத் தொண்டர்களால் எனக்கு அறிவித்தல் தரப்பட்டது. உரியவர்களோடு தொடர்பு கொண்டு அழைத்து ஆவன செய்தோம்.

இது போன்றே அன்றைய நாயன்மார்கள் வரலாறுகளும் அமைந்திருக்குமென எண்ணத் தோன்றுகிறது. காலத்துக்கு காலம் சமயவளர்ச்சியில் எழுச்சி வீழ்ச்சி ஏற்பட்டாலும் நிலைத்து நிற்பதற்கு ஆன்றோர் அருளுரைகள் அரணாகும்.

பெருகலாம் தவம் பேதமை தீரலாம்
திருகலாகிய செல்வர்கள் சரிதம் பெரியபுராணம்

எனப் பரம்பொருளைப்பாடி வாழ்த்தி வணங்கிய அனுபூதிச் செல்வர்களின் சரிதம் நல்வழிகாட்டிகளே என்பது மறக்கவோ மறுக்கவோ முடியாத ஒன்றாகும்.

இது சமய உலகிற்கு கிடைத்த பெருநிதி. சைவசமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்திற்கு கிடைத்துள்ள ஒப்பற்ற ஒளிவிளக்காகும். தொண்டுகள் யாவும் போற்றுதற்குரியன என்றாலும் மனித குலத்திற்குச் செய்யும் தொண்டைத்தான் இறைவன் விரும்புகின்றான் என்பதை அப்பர் சுவாமிகள் வரலாற்றிலிருந்து அறியலாம். அன்று ஈரமும், வீரமும், வாரமும் உள்ள அனுபூதிச் செல்வர்கள் சரிதங்கள், கிருபானந்த வாரியார் போன்றவர்களால் எழுதப்பட்டவை நமக்குதவுவதுபோல இன்றைய நமதுசெய்திகள் அடுத்த சந்ததியும் ஏற்றுப் பயன்பெற வேண்டுமானால் உரியவிடயங்கள் இளையவர்கள் விரும்பிப் படிக்கும் வண்ணம் பதிவு செய்யப்பட வேண்டும்.

சமயங்கள் பலவானாலும் அவை கூறும் நெறி ஒன்றாகவே இருப்பதைக் காணலாம். அன்பு, சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை போன்றவற்றையே வலியுறுத்துகின்றனர்.

யாரொருவர் எந்த சமயத்தில் பிறக்கிறாரோ அந்தச் சமய நெறிமுறைக்கேற்ப வாழ்வை வளர்த்தல் அவர்களது கடமையாகும்.

இளமையின் பதிவுகள் வள மனதினில் எழுதிடும் ஓவியமன்றோ! சின்னஞ்சிறு வயதினிலே வீட்டில் ஆரம்பிக்கும் சமயம் பரிமாண வளர்ச்சிக்கேற்ப விருட்சமாகும். பல சமயப் பெரியார் வரலாறுகள் இதையே கூறும்.

விஞ்ஞான உலகில் விந்தை புரிகிறோமென சிந்தை மகிழ்ந்தாலும் உலகம் அமைதி இழந்து மனிதநேயம் மறைந்து இருள்சூழும் இன்றைய நிலைக்கு இன்றைய தலைமுறையின் சமயக்கல்வி அறிவின்மையும் ஒரு காரணமாகலாம் என எண்ணலாம்.

இங்குள்ள ஊடகங்களில் நாயன்மார்கள் சரிதங்கள உண்மையா? பொய்யா? எனப் பேதங்கள் எழும்போது இச்சம்பவத்தை எழுத வேண்டுமென எண்ணிய எண்ணம் நிறைவேற உதவிய ஆன்மநேயம் கொண்ட கல்லூரித் தோழி திருமதி தங்கமுத்து தம்பித்துரை அவர்களுக்கும், அருநெல்லிக் கனியாகத் திகழும் ஆத்மஜோதி ஐயாவின் திருத்தொண்டு தொடரும் கனடா இந்துசமயப் பேரவை, ஆசிரியர், பொறுப்பாளர், தொண்டர்கள் பணி தொடரவும், வளம்பெருகவும் எல்லாம் வல்ல இறைவனடி பணிந்து நன்றி கூறுவதோடு இன்று வாழும் நாம் நாளைய சந்ததிக்கு சாட்சியாக சமயப் பெரியார் வரலாறுகளைப் போற்றுவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்

## ஞானசுரபி நா. முத்தையா

மனப்பூர்வமாகப் பொய் சொல்லாதே என்பது பொருள். அதாவது மனச்சாட்சியைக் கொலைசெய்யாதே என்றும் கூறலாம். மகாபாரத யுத்தம் நடந்தபோது துரோணரும் அர்ச்சுனனும் நேருக்கு நேராக மோதிக் கொண்டார்கள். அர்ச்சுனனால் துரோணரை முறியடிக்க முடியவில்லை. அர்ச்சுனனால் துரோணரை முறியடிப்பது கஷ்டம் என்று கிருஷ்ணர் அறிவார். அதனால் ஒரு சூழ்ச்சி செய்தார்.

துரியோதனன் பக்கத்திலுள்ள அசுவத்தாமன் என்ற யானை கொல்லப்பட்டது. இதைப் பயன்படுத்தி துரோணாச்சாரியருடைய மகன் அசுவத்தாமன் போரில் இறந்துவிட்டான் என்ற கதையைப் பரவவிட்டார் கிருஷ்ணர். இச்செய்தியைக் கேட்ட துரோணாச்சாரியார் புத்திர சோகத்தினால் வாடினார். இச்செய்தி உண்மைதானா என்பதை உறுதிப்படுத்த துரியோதனன் பக்கத்தார் விரும்பினர். இதனைத் தருமர் உறுதிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்டது. கிருஷ்ணர் தருமரை நாடினார். தருமர் மறுத்துவிட்டார்.

பலநேர விவாதத்தின் பின்னர் கிருஷ்ணர் தருமரை நோக்கி நீங்கள் உள்ளதையே சொல்லுங்கள். அதனால் உங்களுக்கு எந்தவித பாவமும் இல்லை என்றார் கிருஷ்ணர். அதாவது அசுவத்தாமன் என்ற யானை இறந்தது என்று கூறுங்கள். அதுவே போதுமென்றார் கிருஷ்ணர். தருமர் அதற்குச் சம்மதித்துக் கூறத் தொடங்கினார். தருமர் அசுவத்தாமர் என்று சொன்ன உடனேயே கிருஷ்ணர் பாஞ்சசன்னியத்தை முழக்கினார். துரோணருடைய காதில் அசுவத்தாமன் என்ற சொல்லும் இறந்தது என்ற சொல்லுமே கேட்டன. துரோணர் புத்திர சோகத்தினால் உயிரை விட்டார்.

இங்கு தருமர் சொன்ன வார்த்தைகள் உண்மைபோல உருவம் பெற்றவையானாலும் அவை நெஞ்சறிந்த பொய்யான செய்தியேதான். இதற்காகத் தருமர் இறந்த பின்பு இரண்டரை நாழிகை நரகம் அனுபவிக்க வேண்டி இருந்தது.

வாய்மை என்பது வாயால் பேசப்படுகின்ற உண்மை. உண்மை என்பது உள்ளம் அறிந்த சத்தியம். மெய்மை என்பது உள்ளத்துக்கும் சொல்லுக்கும் ஒத்ததாக உடல் செய்கின்ற சத்தியச் செயல். இப்படி மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் தனித்தனியே காக்கின்ற சத்தியத்தையே முறையே உண்மை, வாய்மை, மெய்மை என்பது தமிழ் வழக்கு. எனினும் பிரயோகத்தில் இம்மூன்று சொற்களும் பொய் சொல்லாமை என்ற ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளைக் குறிக்கவே உபயோகிக்கப்படுவது வழக்கமாகிவிட்டது.

வாய்மை என்பது என்னவென்றால் யாருக்கும் எந்தவிதமான தீமையும் உண்டாக்காத வார்த்தைகளைச் சொல்வது. தீங்கு பயக்கக் கூடிய எந்தச் சொல்லும் வாய்மையாகாது.

ஒரு பசுமாட்டைத் துரத்திய வண்ணம், ஒரு கத்தியுடன் கொலைஞன் ஒருவன் ஓடிவந்தான். ஒரு முனிவருடைய ஆச்சிரமத்துக்குள் புகுந்த பசு பின்பக்கமாக ஓடி மறைந்துவிட்டது. கொலைஞன் ஆச்சிரமத்துக்குள் புகுந்தான். அவனுடைய தோற்றத்தைக் கண்டமுனிவர் எல்லாவற்றையும் விளங்கிக் கொண்டார்.

இங்கு பசு வரவில்லையப்பா. அந்தப்பசு எதிரே இருக்கும் அந்தக் காட்டினுள் புகுந்ததைக் கண்டேன் என்றார். கொலைஞன் பசுவைத் தேடிக்கொண்டு சென்று விட்டான். முனிவர் பசு இங்கு வரவில்லை என்றதும் பொய். அந்தக் காட்டுவழியாகச் சென்றதைக் கண்டேன் என்றதும் பொய். ஒன்றுக்கு இரண்டு பொய்யாகச் சொல்லி ஒரு உயிரைக் காப்பாற்றி வைத்தார். அவர் உண்மையைச் சொல்ல முனைந்திருப்பாரானால் பசு தவறாது கொல்லப்பட்டிருக்கும். பசுவைக் கொல்லும் மெய் உண்மையான மெய்யுமல்ல. அது போல் பசுவைக் காப்பாற்றிய இரு பொய்களும் உண்மையான பொய்களுமல்ல. எவருக்கும் தீமையில்லாத பொய், அதுவும் பிறருக்கு நன்மை பயந்த பொய் உண்மையாகக் கருதப்படும்.

"பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்குமெனின்"

என்பது வள்ளுவர் வாக்கு. புரைதீர்ந்த நன்மை என்பது யாதொன்றும் தீமையிலாத நன்மை. புரைதீர்ந்த தன்மையைக் கருதி பொய்யுரைப்பது என்பது ஒரு தாயானவள் பல பொய்களைச் சொல்லி தன் குழந்தைக்கு மருத்தெண்ணெய் ஊட்டுவது போன்றது. புரையுள்ள நன்மைக்கு உதாரணம்: ஒருவன் தனக்கு வேண்டிய நண்பன் இன்னொருவனுக்கு கொடுமை செய்து விட்டதைப் பார்த்துக் கொண்டிருந்தான். தன் நண்பன் செய்தது அநீதி என்பது தெரியும். ஆனாலும் தன்னுடைய நண்பனைத் தப்ப வைக்க வேண்டும் என்ற நன்மையைக் கருதி அவன் அப்படிச் செய்யவில்லை என்று பொய் கூறுகிறான். இது தன்னுடைய நண்பனுக்கு நன்மையுள்ளதானாலும் இன்னொருவனுக்கு அநியாயம் செய்கிற புரையுள்ளது. அதனால் அது வாய்மையோடு சேராது.

ஒருவன் தன்னுடைய மனச்சாட்சி, சத்தியம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்ததைப் பொய்யாக்கும்படி எதையும் சொல்லிவிடக்கூடாது. தருமர் சொன்ன பொய் இத்தகையதே. அப்படிச் சொன்னால் அவனுடைய மனச்சாட்சியே அவனை இடித்து வருத்தப்படுத்தும். எதைச் சொன்னாலும் சொல்வது நன்மை பயக்குமா, தீமைபயக்குமா என்று ஆலோசிக்க வேண்டும். அப்படி ஆலோசிக்கும் பொழுது தன்னுடைய மனச்சாட்சி எது சரி என்று அறிவிக்கின்றதோ அதைச் சொல்ல வேண்டும். ஒருவனுடைய கண்ணும் காதும் அறிந்தது மட்டும் வெளியிடத்தகுந்த வாய்மையாகிவிடாது. கண்டதையும் கேட்டதையும் தன்னறிவோடு சேர்த்துப் பார்க்கும்போது மனச்சாட்சி அறிவிப்பதுதான் சொல்ல வேண்டிய வாய்மை. அவர் சொல்லுவது வாய்மையா அல்லவா என்பதற்குச் சொல்லுகிறவனுடைய எண்ணம் நல்லதா கெட்டதா என்பதுதான் அளவுகோல். உள்ளம் நல்லதானால் நோக்கமும் பயனும் நல்லனவேயாகும்.

மனச்சாட்சிக்கும் பொய்யனாகாமல் நடந்து கொள்ளக்கூடியவன் வாயால் ஒரு பொய்யே சொன்னாலும் பிறருக்குப் புரைதீர்ந்து நன்மை உண்டாக்கும் நோக்கத்தோடு தான் சொல்லுவான். யாருக்கும் தீமை உண்டாக்கக் கூடிய எதையும் சொல்ல மாட்டான். ஆதலால் அவன் என்ன சொன்னாலும் அது சத்தியம் என்று மற்றவர்கள் பாராட்டி அவன் கொன்னதை ஒத்துக் கொள்வார்கள். இப்படி மனச்சாட்சிக்குப் பொய்யனாகாமல் பிறருக்கு குற்றமற்ற நன்மையை நாடி வாயால் பொய் சொன்னாலும்கூட அப்படிப்பட்டவன் உலகத்தார் உள்ளத்துளெல்லாம் இருப்பான் என்றால் அவன் உத்தமன்.

மனச்சாட்சிக்கும் மெய்யனாகி, வாயாலும் மெய்யே பேசக் கூடுமானால் அப்படிப்பட்டவன் தவத்தையும் தானத்தையும் ஒருங்கே செய்யக்கூடியவர்களுக்கும் சிறந்தவனாவான். மனமுஞ் சொல்லும் ஒன்று சேர்ந்து ஒரேகாலத்தில் வாய்மை காப்பது மிகவுங் கடினமான காரியம். உள்ளபடி சொன்னால் பிறருக்கு தீங்கு வருவதை அஞ்சி சிலசமயங்களில் பொய்மையும் வாய்மையிடத்ததாம் புரைதீர்த்த நன்மை பயக்குமெனின் என்பதற்கிணங்க பொய் சொல்ல வேண்டியிருக்கும். அச்சமயத்தில் மனம் வாய்மையைக் கருதி வாய் பொய்யைச் சொல்கிறது. அப்படிச் செய்யாமல் தீமை வருமென்று மனம் சொல்வதை மதிக்காமல் உள்ளபடியே சொல்லிவிட்டால், மனச்சாட்சி பொய்யாகிவிட நாக்கு வாய்மையைச் சொல்லுகிறது. இந்த இரண்டு சங்கடங்களும் இல்லாதபடி மனச்சாட்சியும் பொய்யாகாமல் சொல்லும் சொற்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யில்லாமல் வாய்மை காப்பவர்கள் மிகவும் அருமை. அப்படிப்பட்டவர்கள் தவம் தானம் முதலிய எல்லா அறங்களையும் ஏககாலத்தில் செய்யக்கூடியவர்களைக் காட்டிலும் சிறந்தவர்கள். ஆகையால் மனத்தாலும் வாக்காலும் பொய் சொல்லாதிருப்பதைக் காட்டிலும் சிறந்த அறம் வேறில்லை.

பொய் சொல்லாதிருப்பதைவிடப் புகழ் தரக்கூடியது வேறொன்றுமில்லை. வேறு முயற்சிகள் செய்து பாடுபடாமலேயே எல்லாவிதமான தர்ம பலன்களையும் தரும். எல்லா அறமும் தரும் என்பதும் புலனாகிறது. புகழையும் எல்லா அறங்களின் பயனையும் தரும் என்பதனால் இம்மைக்கும் மறுமைக்கும் அதுவே போதும் என்பதைக் குறிப்பதாகும். பொய்யாமை என்பது மனத்தொடு வாய்மை மொழிதல் என்பதையே குறிக்கும். ஆகையால் பொய்யாமையைக் கடைப்பிடித்தாலே போதும். வேறு அறம் செய்ய வேண்டாம். சத்தியம் ஒன்றைக் கடைப்பிடித்தால் மற்ற எல்லா அறங்களும் அதனோடியைந்து வரும்.

சத்தியத்தைக் காப்பாற்றிய உத்தம மனிதன் அரிச்சந்திரன். அரிச்சந்திரனுக்குச் சோதனைக்குமேல் சோதனை ஏற்பட்டது. இராச்சியத்தை இழந்தான்; ஒரே ஒரு மகனை இழந்தான். கட்டிய மனைவியையே கொலை செய்ய வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்பட்டது. மோட்சத்தை இழக்க நேரிட்டாலும் பொய் சொல்ல மாட்டேன் என்று உறுதியோடு இருந்தான் அரிச்சந்திரன். அதனால் அவன் புகழ் இன்றுவரை நீடித்துள்ளது. மேலும் மேலும் அரிச்சந்திரன் புகழ் நீடித்து நிற்கும். மகாத்மா காந்தியினுடைய வாழ்க்கையை அரிச்சந்திரனுடைய நாடகம் மாற்றியமைத்ததென்றால் அவனுடைய பெருமையை எவ்வாறு புகழ்வது?

பொய் சொல்லா அறத்தைத் தவறின்றிக் காத்தால் வேறு அறம் ஒன்றும் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. எல்லா அறங்களுக்கும் மனம் சுத்தமாக இருக்க வேண்டியதே முதன்மையானது. மனச் சுத்தம் என்பது பொய்யாமையினால்த்தான் வரும். உடலின் வெளிப்புறத்தை தண்ணீரால் சுத்தப்படுத்திக் கொள்ளலாம். உடலின் உட்புறமாகிய மனதைச் சுத்தப்படுத்த வாய்மைதான் வேண்டும். சான்றோருக்கு வழிகாட்டி சத்தியந்தான். உயர்ந்த அறிவுடையோருக்கு வழிகாட்டுவது மற்ற விளக்குகள் அல்ல. சத்தியம் தான் அவர்களுக்கு வழிகாட்டும் விளக்கு.

சத்தியத்தை உணர்ந்து அது காட்டும் வழியில் தான்

46ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சித்தர் நயினாதீவுச் சுவாமிகள்

## முருகேசு தாமோதரம்பிள்ளை

சித்தர்கள் என்ற சொல்லுக்கு சித்தி பெற்றவர்கள் என்பது பொருள். அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள்.

அணுவைப்போல் சிறிதாதல் - அணிமா
மேருவைப் போல் பெரிதாதல் - மகிமா
காற்றைப்போல் இலேசாகுதல் - இலகுமா
பொன் போலப் பளுவாதல் - கரிமா
எல்லாவற்றையும் ஆளுதல் - பிராப்தி
எல்லாவற்றையும் வசப்படுத்துதல் - வசித்துவம்
கூடுவிட்டு கூடு பாய்தல் - பிரகாமியம்
விரும்பியவற்றை செய்து முடித்து அனுபவித்தல் - ஈசத்துவம்

என்ற எட்டு வகை பெரும்பேறுகளை அட்டமா சித்திகள் என்பர். சித்தர்களுக்கு சாதி, சமயபேதம் சொந்தம் பந்தம் எதுவும் கிடையா. இவர்கள் எல்லா உயிர்களிடத்தும் இறைவனை தரிசிப்பவர்கள்.

பத்தியோகம், ஞான யோகம் உள்ளவர் அரிதாகவே இருப்பார். இப்படி நல்ல பக்குவம் அடைந்து யோகச்சித்தனாக அல்லது பூர்ண ஞானியாகிவிட்டவர் எம் மத்தியில் வாழ்ந்தால் அவரிடத்தில் இருந்து வெளிப்படும் சக்தி வியாபிக்கும்போது எங்கள் மேல்பட்டு எங்களுக்கு தாபசாந்தி உண்டாகும். இப்படிப் பக்குவம் அடைந்த யோகச்சித்தன் தான் எங்கள் நயினாதீவுச் சுவாமிகள் என அழைக்கப்படும் சிவத்திரு முத்துக்குமார சுவாமிகள். எங்கள் மூதாதையர் செய்த தவத்தினால் சில வருடங்கள் எம்மத்தியில் உலாவித் தன் அருட்பார்வையால் எம் சஞ்சலங்களைப் போக்கி மனதைச் சுத்தப்படுத்தி எம் வேண்டுதலைக்கூட நிறைவேற்றி உள்ளார்கள்.

என்னை கவிஞர் கந்தவனம் அவர்கள் சுவாமிகளைப் பற்றிய தொகுப்பு ஒன்றை எழுதித் தரும்படியும் அதனை ஆத்மஜோதி மலரில் பிரசுரிப்பதாகவும் கூறியிருந்தார்கள். அதற்குச் சுவாமிகளைப் பற்றிய அறிஞர்கள், அடியவர்கள், தாங்கள் கண்டும் கேட்டும் உள்ளன்போடு வெளியிட்டுள்ளதையும் நான் கண்டும் கேட்டதுமாகிய அனுபவத்தையும் தருகிறேன்.

சுவாமிகள் சமாதி அடைந்தது 26-01-1949 ஆம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு அப்பொழுது ஆறுவயது. ஐந்து வயதளவில் நயினை பிள்ளையார் கோயில் மதுரை மரத்தின் கீழ் இருந்து யோகநிலையில் இருப்பார். அப்பொழுது நான் ஆரம்பக் கல்வியை முதலாம் வகுப்பு படிப்பவனாக இருந்திருப்பேன். அவரிடம் கற்கண்டு வேண்டிச் சாப்பிட்ட ஞாபகம் உண்டு. இது தவிர சுவாமிகள் யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடியில் திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் வீட்டில் சமாதி அடைந்து பின் கண்ணாடிப் பெட்டியில் வைத்து ஊர்காவற்றுறை ஊடாக வள்ளத்தில் நயினாதீவுக்குக் கொண்டு வந்தார்கள். நயினாதீவு வங்களாவடித்துறையில் இருந்து காட்டுக் கந்தசுவாமியார் கோயிலடி வரைக்கும் வாகனக் கொம்பில் வைத்துக் கட்டி அன்பர்கள் தோளில் சுமந்து வந்தார்கள். சுவாமிகள் பத்மாசனம் இட்டபடியே நிமிர்ந்து இருப்பதைக் கண்டேன். ஆனால் அப்பொழுது எனக்கு அறியும் பக்குவம் இல்லை. இப்பொழுது பார்க்கும்பொழுது அவர் யோகநிலையால் சிந்தையை அடக்கிச் சமாதி அடைந்ததை உணரமுடிகிறது.

சுவாமிகளைப் பற்றி திரு. வே. சிவபாதமணி அவர்களால் 2002ஆம் வருடம் தைமாதம் வெளியிட்ட ஒரு புத்தகத்தை எனக்கு அனுப்பியிருந்தார். அப்புத்தகத்தை 2003ஆம் வருடம் தைமாதம் இரண்டாம் பதிப்பாக சிவத்திரு முத்துக்குமாரசுவாமிகளின் ஐம்பத்து நான்காவது வருட வெளியீடாக வெளியிட்டேன். இப்பொழுது ஆத்மஜோதி மலரில் வெளியிடுவதை மனச்சந்தோஷத்துடன் வாழ்த்துகிறேன். இந்த ஆத்மஜோதி அச்சகத்தை நாவலப்பிட்டியில் முதல் முத்தையா சுவாமிகளுக்கு வழிகாட்டியாக ஆரம்பித்து வைத்தவர் நயினை இல்லறஞானி க. இராமச்சந்திரா அவர்கள் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். சுவாமிகளின் குருபூசை திதி அபரபக்க திரயோதசி பூராட நட்சத்திரம்.

ஈழத்து சித்தர் நயினாதீவுச் சுவாமிகளைப் பற்றி அன்பர் திரு. சி. பத்மநாதன் (ஓட்டுமடம்) நயினை நாகபூஷணி அம்மன் அறங்காவலர் திரு. ஆ. தியாகராசா, சைவப்புலவர் நா. விசுவலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்), திரு. வி. ஆர்.கே. இரத்தினசபாபதி (விவாகப்பதிவாளர், யாழ்ப்பாணம்) திருமதி கமலாம்பிகை பாலசிங்கம் ஆசிரியை, திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் (சுன்னாகம்), நடா சச்சிதானந்தம் (சிவலிங்கப்புளியடி-நயினை நாகபூஷணி அம்மன் தீர்த்தத் திருவிழா உபயகாரர்), இணுவில் சோ. பரமசாமி B.Sc. (நம்பி), மெய்யடியார் திரு. உ. கந்தசுவாமி (தலைவர் -பகவான் ஸ்ரீ சததியசாயிசேவாசமுத்தி), டாக்டர் இ. இராஜேஸ்வரன் -கோப்பாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி பா. திக்கம் செல்லையாபிள்ளை (கந்தவனம்), சுப்பிரமணிய சுவாமி கோவில் அதிபர், திரு செல்லப்பா நடராசா (கொக்குவில்), திரு.கந்தையா சொாணலிங்கம், திரு. அ. விஸ்வநாதன் (இளைப்பாறிய அதிபர்(அளவெட்டி), திருமதி தம்பிஜயா சிவமணி (வண்ணார் பண்ணை) போன்றவர் எழுதியுள்ளார்கள். சுவாமிகள் காலத்தில் ஊடகங்கள் வானொலிகள் இல்லை. சுவாமிகளின் காலத்து அடியவர்களும் பெரும்பாலானோர் இப்பொழுது இல்லை.

சுவாமிகளின் பூர்வீகம்

சிவபூமி என்று போற்றப்படும் ஈழத்திருநாட்டின் வடபால், யாழ்.குடாநாட்டின் மேற்கில், சப்த தீவுகளின் மத்தியில் நயினாதீவு என்று அழைக்கப்படும் சிறிய தீவில் அறுபத்து நான்காவது பீடமாகிய புவனேஸ்வரி பீடத்தில் அன்னை ஸ்ரீ நாகபூஷணி அமர்ந்து அகிலமெல்லாம் ஒளிபரப்பும் சிறப்பினையுடைய சக்தி வாய்ந்த இப்புண்ணியபூமியில் வாழ்ந்த திரு. ஆறுமுகம் பார்வதி தம்பதியினருக்கு பிறந்த எட்டுப்பிள்ளைகளில் ஆறாவது பிள்ளையாக 1897ஆம் ஆண்டு அவதரித்தார். பெற்றோர் இவருக்கு முத்துக்குமாரு என்று பெயர் சூட்டினர். முத்துக்குமாரு அக்காலத்தில் திண்ணைப்பள்ளிக்கூடத்தில் ஓரளவு எழுத வாசிக்க படித்திருப்பாரென நினைக்கிறேன். அப்பொழுதே அவரிடத்தில் விளையும் பயிரை முளையில் தெரியும் என்பதற்கு இணங்க நிறைஞானியாகக்கூடிய பக்குவங்கள் தெரியத் தொடங்கியதாக கேள்விப்பட்டிருக்கிறேன்.

---

43ஆம் பக்கத் தொடர்ச்சி

சான்றோர்கள் நடப்பார்கள். உலக நடையின் அஞ்ஞான இருளை அவர்கள் சத்தியத்தின் ஒளி கொண்டுதான் கடப்பார்கள். சத்தியத்தைக் காட்டிலும் சரியான வழிகாட்டி வேறில்லை. நாம் அறிந்த உண்மைகளுக்குள் பொய் சொல்லாமை என்பதைக் காட்டிலும் நல்ல துணை வேறொன்றுமில்லை. மெய்யாகக் கண்டவை என்பது கற்றும் கேட்டும் அனுபவித்தும் அறிந்த உண்மைகள். சத்தியத்தைக் கடைப்பிடிப்பதைக் காட்டிலும் உயர்ந்த அறிவே கிடையாது.

இவற்றிலிருந்து நெஞ்சாரப் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம் என்பது தெளிவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

## திருமுறைச் செல்வர் சிவ. முத்துலிங்கம்

- சிவம் என்பதிலிருந்து பிறந்தது சைவசமயம். ஆன்மாக்கள் சிவபெருமானை அடைவதற்கு என்னென்ன பணிகள் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்வதே சிவபணிகளைப் பரப்பும் சபைகளின் நோக்கமாக இருக்க வேண்டும்.

- இளைஞர் உள்ளங்களில் சிவநினைவை பதியச் செய்வதற்கான சாதனைகளை, சிவப்பணிகளை செய்யும் சபைகள் ஏற்படுத்த வேண்டும்.

- சகல ஆலயங்களிலும் சமயத்தைப் பரப்பும் பொது மன்றங்களிலும் வாரங்கள் தோறும் கூட்டுவழிபாடுகளை ஏற்படுத்த வேண்டும்.

- சமயம் பரப்பும் மன்றங்களில் உள்ள அங்கத்தவர்கள் யாவரும் தவறாது வாரந்தோறும் நடைபெறும் வழிபாடுகளில் கலந்து கொள்ள வேண்டும்.

- வாரத்தில் ஒருசில மணித்தியாலங்கள் அங்கத்துவம் வகிக்கும் மன்றங்களின் பணிகளுக்கு ஒதுக்க முடியாதவர்கள் அவற்றில் அங்கத்துவம் வகிக்கத் தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

- சமயப்பணிகள் செய்யும் மன்றங்கள் ஆண்டுக்கொருமுறை விழா நடத்தி விடுவதால் தமது கடமை முடிந்துவிட்டது என்று நினைக்கக் கூடாது. சமயவளர்ச்சிக்கு முக்கிய மானது சாதனை. சாதனையில்லாமல் பேச்சினால் யாது ஒரு பயனும் இல்லை.

- இன்று விஞ்ஞான வளர்ச்சியினால் உலகம் மிகச் சமீபத்தில் வந்துவிட்டது. ஆனால் மனிதமனத்தில் பிரிவினைகள் ஏற்பட்டுக்கொண்டே செல்கின்றன.

- அன்று கடவுள் பக்தியால் உலகம் முழுவதுமே ஒன்றுபட்டு வாழ்ந்தது. இன்று அரசியல் சீர்கேடுகள் உலகம் முழுவதும் மலிந்து விட்டதால் தேசங்களுக்கு இடையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமூகங்களுக்கிடையிலும் பெரும் கோளாறுகள் உண்டாகி வருவதைக் காணலாம்.

- யாத்திரீகன் கடவுள் பக்தி ஒன்றை வைத்துக் கொண்டு உலகம் முழுவதையும் சுற்றி வந்தான். இன்று அரசியல்வாதி பல கட்டுக்காவல்களுக்கிடையிலும் தன் சொந்த நாட்டிலே பிரயாணம் செய்ய முடியவில்லை.

- மிகவும் உயரிய மனிதன் கணப்பொழுதும் அன்பினாலே உயிர் வாழுகிறான். அவன் தனக்கு எவ்வித இடையீறுகள் ஏற்படினும் அவற்றில் இன்பத்தையே காணுகின்றான்.

- சமயம் என்பது நம்மை யார் என உணர வைக்கின்றது. நமக்குள்ள துன்பங்கள் யாவை என்பதை புலப்படுத்துகின்றது. அத்துன்பங்கள் ஏன் நேர்கின்றன என்பதை விளங்கவைக்கின்றது. அவற்றை களைவதற்கு வழிகளையும் கூறுகின்றது.

- நாம் செல்லும் இடங்களில் சேர்ந்து வாழுதலும், நம்மை நாடி வந்தோரை அணைத்து வாழுதலும் இந்துக்களின் சிறப்பான பண்பாடாகும்.

- அன்பு உலகளாவியது. அது இல்லாத இடமேயில்லை என்பது இந்து மதக் கொள்கை.

- இயற்கையில் உண்டாகும் புயலைவிட மனதில் உண்டாகும் புயல் மிகமிகக் கொடுமையானது. மனநோயால் ஏற்படும் புயல் தனிமனிதனை அழிக்கும் மனப்பேயால் ஏற்படும் புயல் மனித இனத்தையே அழிக்கும். மனப்பேய்க்குக் காரணம் தான் என்னும் திமிர் உணர்வே. மனமே ஆறாவது அறிவு. ஆறாவது அறிவில் அகப்பேய் பிடித்துக் கொண்டால் தெளிவு என்னும் உணர்வே அதனைத் துரத்த முடியும்.

- ஒவ்வொருவரும் தமக்காக உள்ளனர். கடவுள் ஒருவரே எல்லோரையும் காப்பவர்.

- நெஞ்சமே நல்ல கையேடு. பட்டறிவே சிறந்த ஆசிரியர். உலகமே பல்கலைக்கழகம். கடவுளே சிறந்த நண்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org